பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 21 ஞாயிற்றுக்கிழமை 06.12.2020 கதிர் 31

**இது ரகசியம் அல்ல!**

'வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்றானம்' – என்ற ஒரு பேச்சுமொழி வழக்கு நம் மத்தியில் உண்டு.

நேற்று இப்பத்தியில் நான் கிளப்பிய ஒரு சர்ச்சை தொடர்பில் இலங்கைத் பக்கம்02 »

# எத்தனை வருடங்கள் கடந்தாலும் தமிழினத்தை அழிக்கவே முடியாது

## சபையில் சாணக்கியன் எம்.பி. வீர முழக்கம்



எத்தனை வருடங்களானாலும் எமது இனத்தை அழிக்க முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 15 »

## நாடாளுமன்றில் 'கார்த்திகைப் பூ' பிரிட்டன் தூதரகம் விளக்கமளிப்பு



தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவேந்தும் தினத்தன்று (நவம்பர் 27) பிரிட்டன் நாடாளுமன்றத்தின் முன்பகுதியில் கார்த்திகைப்பூ ஒளிரச்செய்யப்பட்டமை 02 »

## கடற்படையினருக்கு மீண்டும் கொரோனா

பூஸா தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 கடற்படையினருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த கடற்படை வீரரோடு நெருங்கியத் தொடர்பிலிருந்த 85 15 »

## ஒன்றரை வயது குழந்தை உட்பட மூவருக்கு பருத்தித்துறையில் கொரோனாத் தொற்று!

பருத்தித்துறையில் ஒன்றரை வயதுப் பச்சிளம் குழந்தை உட்பட மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 315 பேருக்குக் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அவர்களில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குக் கொழும்பிலிருந்து 15 »

## வெள்ளத்தில் மூழ்கியது யாழ்ப்பாணக் குடாநாடு

நேற்றும் முன்தினமும் கொட்டித் தள்ளிய மழையினால் வெள்ளத்தில் மூழ்கியது யாழ்ப்பாணக் குடாநாடு.

யாழ் குடாநாட்டின் மழையால் 57 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(விவரங்கள், படங்கள் உள்ளே...)



## பத்திரிகை நிறுவனமொன்றில் மேலும் 6 பேருக்குக் 'கொரோனா'

கொழும்பு நகரில் அமைந்துள்ள பத்திரிகை நிறுவனமொன்றில் மேலும் 6 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பத்திரிகையின் சிங்கள மற்றும் ஆங்கில பதிப்புகளில் இரு ஊடகவியலாளர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

ஏனையவர்கள் குறித்த நிறுவனத்தின் போக்குவரத்து மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் கடமையாற்று 15 »

## தாழமுக்கம் கரையைக் கடக்கும் வரை வடக்கு மாகாணத்தில் மழை பெய்யும்!

வடக்கு மாகாணத்தினூடாக கடந்து சென்ற புரேவிப் புயலானது வலுக்குறைந்து தீவிர தாழமுக்கமாக மன்னார் வளைகுடாக் கடற்பகுதியில் கடந்த 48 மணி நேரமாக ஒரே இடத்திலேயே நிலைகொண்டுள்ளது எனப் புவியியல்துறை ஆய்வாளர் நாகமுத்து பிரதீபராஜா நேற்று மாலை தெரிவித்தார்.

இது அடுத்த 16 மணி நேரத்துக்கும் அதே இடத்திலேயே நிலைத்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இந்தத் தாழமுக்கம் கரையைக் கடக்கும் வரை வடக்கு மாகாணத்தில் மழை பெய்யும். 15 »

## இலங்கையில் மேலும் 7 பேர் பலி; கொரோனா சாவு 138 ஆக உயர்வு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

இறுதியாக 7 கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளன என்று சுகாதார தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்துள்ளது.

## 8,000 கைதிகளுக்கு இம்மாதம் விடுதலை

சிறையில் உள்ள நெருக்கடியைக் குறைப்பதற்காக இந்த மாதத்தில் எட்டாயிரம் விளக்கமறியல் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் சீரமைப்பு 02 »

## மனைவி சுட்டுப் படுகொலை; கணவன் கம்பி எண்ணுகிறார்

மாத்தளை மாவட்டம், நாவுல, கொடஉல்பத்த பகுதியில் மனைவியைச் சுட்டுப் படுகொலை செய்த கணவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவர் பயன்படுத்திய துப்பாக்கியும் இதன்போது கைப்பற்றப்பட்டது.

வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை அடுத்து இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் 15 »

## நேற்றும் 669 பேருக்கு கொரோனாத் தொற்று

### 27 ஆயிரத்தைக் கடந்தது மொத்தப் பாதிப்பு

கொழும்பு, டிச. 06

இலங்கையில் நேற்றும் 669 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 228 ஆக அதிகரித்துள்ளது. 15 »

மணமகள் தேவை
1983, யாழிந்து வேளாளர், ரோகினி
CANADA Citizen Software Analyst
31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு
31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை
Call 076 664 9401 (Whatsapp/Viber)
ஒன்லைன் திருமண சேவை
www.EQMarriageService.com
Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

மணமகள் தேவை
1987, யாழிந்து வேளாளர், அஸ்வினி
DOCTOR, உடுவில்
31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு
31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை
Call 076 664 9401 (Whatsapp/Viber)
ஒன்லைன் திருமண சேவை
www.EQMarriageService.com
Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

மணமகள் தேவை
1983, யாழ்.கிறிஸ்தவ வேளாளர், அவிட்டம்
BANK MANAGER, கரம்பொன்
31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு
31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை
Call 076 664 9401 (Whatsapp/Viber)
ஒன்லைன் திருமண சேவை
www.EQMarriageService.com
Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா அனுப்பியுள்ள விளக்கக் கடிதத்தை பார்க்கையில் இந்தப் பேச்சு மொழிதான் எனக்கு நினைவு வந்தது.

அவரது விளக்கக் கடிதத்தை ஓர் அடித்தல், திருத்தல் இன்றி அப்படியே முதலில் தருகின்றேன்.

அதற்கு முன்னர் ஒரு விடயம். நேற்று இப்பத்தியில் நான் கிளப்பிய சர்ச்சையின் கருப்பொருள் யாது என்பதை சுருக்கமாகக் குறிப்பிட்டு விடுகிறேன்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காகக் கட்சிகள், தரப்புகளின் கருத்தை அரசமைப்பு உருவாக்கக்குழு கோரியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு யோசனைத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை சம்பந்தன் முன்னெடுக்கின்றார். ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் தலைமையில் அக்குழு செயற்படுகின்றது. இது குறித்து கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் சம்பந்தன் விளக்கியுள்ளார்.

இதற்கிடையில், யாழ்ப்பாணத்தில் தாம் கூட்டியுள்ள – தமிழக் கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள கட்சிகளையும் உள்ளடக்கிய – பத்துக் கட்சிகளின் கூட்டு சார்பில் புதிய அரசமைப்பு தொடர்பில் ஒரு பொது யோசனைத் திட்டத்தை வேறாகத் தயாரித்துச் சமர்ப்பிக்க தன்பாட்டில் மாவை சேனாதிராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

அது குறித்து கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கோ மற்றும் சுமந்திரன் உட்பட தமிழரசுக் கட்சி எம்.பிக்களுக்கோ அல்லது தமிரசுக் கட்சியின் பிற தலைவர்களுக்கோ அறிவிக்காமல் மாவை செயற்படுகின்றார். இதுவே சம்பந்தன், கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் செல்வராசா போன்றோருக்கு சீற்றத்தைத் தந்திருக்கின்றது. – என்று நான் குறிப்பிட்டேன்.

ஏனைய ஒன்பது கட்சிகளுடன் சேர்த்து ஒரு கட்டமைப்பாக இயங்குவது குறித்தும் கூட இன்னும் தமிழரசுக் கட்சியின் பொருத்தமான அமைப்பைக் கூட்டி அறிவித்து, அனுமதி பெறாமல் தான்தோன்றித் தனமாக மாவை சேனாதிராசா செயற்படுகின்றார் என்ற சாரப்படவும் நான் குற்றம் சுமத்தியிருந்தேன்.

இந்தப் பின்னணிப் புரிதலுடன் மாவை சேனாதிராசாவின் விளக்கக் கடிதத்துக்குள் நுழையுமாறு வாசகர்களைக் கோருகிறேன். இந்த விவகாரத்துக்கு அவர் ஏதேனும் தெளிவான பதில் தந்திருக்கின்றாரா என்பதை கடிதத்துக்குள் நுழைந்து தேடுமாறு நான் வாசகர்களைக் வேண்டுகிறேன்.

**மாவையின் கடிதம்**

*யாழ்ப்பாணம்*
*05.12.2020*
*ஆசிரியர்,*
*காலைக்கதிர்,*
*யாழ்ப்பாணம்.*
*வணக்கம்,*

*தங்களை ஆசிரியராகக் கொண்ட காலைக்கதிர் ஏடு 05.12.2020 முற்பக்கத்தில் 'இனி இது இரகசியமல்ல' எனுந் தலைப்பில் வெளிவந்த செய்தியில் "தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மேற்கொள்ளும் நடவடிக்கைகள், செயற்பாடுகள் குறித்து கூட்டமைப்பின் தலைவர் திரு.இரா.சம்பந்தன் மிகுந்த அதிருப்தி" என்றும், திரு.செல்வராசாவும் மிகுந்த சீற்றத்துடனிருக்கிறார் என்றும் கட்டுக் கதை செல்கிறது.*

*அச்செய்தியில் "திரு.சம்பந்தன் மாவை. சேனாதிராசாவிடமும் புதிய அரசியலமைப்புக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சமர்ப்பிக்க வேண்டிய அரசியலமைப்புக்கான பிரேரனை தொடர்பாகவும் பேசியிருக்கிறார்" என்றும் சொல்லப்படுகிறது.*

*நான் நேற்று 04/12/2020 முற்பகலிலும் திரு.சம்பந்தனுடன் தொலைபேசியில் பேசினேன். அதற்கு முன் 20/11/2020 காலையிலும் கொழும்பில் நான் அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்து அரசியலமைப்பு விடயங்கள் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளேன். "கொரோனா வைரஸ் நோய்" தீவிரமடைந்துள்ளபடியால் தமிழரசுக் கட்சியின் நிர்வாகக் கூட்டமொன்றை விரைவில் கவனமாக ஓரிடத்தில் நடத்தவும் பேசினோம்.*

*அதற்கு முன்னர் 23/10/2020 அன்றும் திரு.சம்பந்தன் அவர்கள் கொழும்பு இல்லத்தில் திருவாளர்கள் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், நானும் சந்தித்துப் பேசியிருக்கிறோம். தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டங்கள் பற்றியும், இவ்வேளையில் புதிய அரசியலமைப்புக்கான தமிழ்த் தரப்பு பிரேரணை மற்றும் 2021 வரவுள்ள ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானம் தொடர்பாகவும், தமிழர் தரப்பு ஒன்றுபட்டு செயல்பட வேண்டுமென்பது பற்றியும் பேசியிருக்கிறோம்.*

*யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டத்தில் பங்கு கொண்ட திருவாளர்கள் சுமந்திரன், சிறீதரன், சித்தார்த்தன் உட்படக் குறித்த மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். 1.தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் 29.11.20 அன்று நடந்த பொழுது கார்த்திகை விளக்கீடு அரசினால் அவமதிக்கப்பட்ட விடயம்;*

*2.புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகப் பிரேரணையொன்றில் செயல்பட வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளில் ஈடுபட ஐவர் கொண்ட குழு ஒன்றும் நியமிப்பதென்றும் மட்டுமே தீர்மானிக்கப்பட்டது.*

*இது எங்கள் கடமை. வேறு என்ன முக்கியமாக நாம் பேச வேண்டும்? இன்று இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகளிலும் நாம் ஒன்றுபட்டு ஒரே குரலாக இருக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்களும் குறிப்பாக இந்தியாவுடனும் சர்வதேச அரங்கிலும் இலங்கைத் தமிழர் விடுதலை இலக்கில் ஒன்றுபட்டு நாம் செயல்பட வேண்டும்*

*எனவே காலைக்கதிர் பத்திரிகையில் 05/12/2020 என்னைச் சம்பந்தப்படுத்தி எழுதப்பட்டுள்ள தவறான செய்திகளை முற்றாக நான் மறுக்கிறேன். நான் தாங்கள் வெளியிடும் எல்லாத் தவறான செய்திகளுக்கும் பதிலளிப்பதில்லை. பல செய்திகளை பார்க்கவும் முடிவதில்லை.*

*தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் சொல்லாத விடயங்களை திரு. சம்பந்தனும், திரு.செல்வராசாவும் தங்களுடன் பேசுகிறார்கள், அதை நீங்கள் வெளியிடுகிறீர்கள் என்பது ஆச்சரியமானதே. இது உண்மைக்கு மாறானது!*

*தங்களுடைய இத்தகைய தவறான எழுத்துக்கள் மூலம் எனக்கு அவப்பெயரையும் தமிழரசுக் கட்சியில் சீர்குலைவையும் மற்றும் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டிய தமிழ்த் தேசியக் கட்சிகளுள் குழப்பத்தையும், தமிழ் மக்களிடம் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.*

*இவை பற்றியும் உங்களிடமுள்ள வருத்தம் பற்றியும் வேண்டுமானால் ஒரு பத்திரிகை மூத்த ஆசிரியர் என்ற வகையில் நேரில் சந்தித்து பேசவும், விளக்கமளிக்கவும் ஆயத்தமாகவுள்ளேன்.*

*நன்றி*
*மாவை.சோ.சேனாதிராசா தலைவர்,*
*இ.த.அ.கட்சி*

– இதுதான் வார்த்தைக்கு வார்த்தை மாவை சேனாதிராசாவின் கடிதம்.

**என் குறிப்பு**

இனி, என் பதில் குறிப்புக்கு வருகிறேன்.

இரு விடயங்களுக்காக நான் மாவை சேனாதிராசாவிற்கு முதலில் நன்றி தெரிவிக்கிறேன்.

ஒன்று – என் கருத்துக்குப் பதில் தர முயன்றமைக்கு.

அடுத்தது – ஓர் ஆசிரியர் என்ற முறையில் என்னைச் சந்தித்து பேசவும், விளக்கமளிக்கவும் தாம் தயார் என்று அவர் கூறியமை. அது மிகப் பெரியவார்த்தை. மிக உயர்ந்த பண்பு. தலைமைத்துவச் சிறப்பு. வயதிலும், அனுபவத்திலும், அரசியல் சேவையிலும், உயர்ந்த பண்பியல்புகளிலும் மூத்தவரான அவரை எங்கு தேடிச் சென்றும் நானே சந்திப்பேன். அப்படி அவரைச் சந்திக்க முடியாதவராக எமக்கு தொலைவில் அவர் என்றும் இருந்தவருமல்லர். எங்களை அப்படித் தள்ளி வைத்தவருமல்லர்.

ஆனாலும், அவர் அப்படிக் குறிப்பிட்டமை எனக்கான கௌரவமல்ல, முழுத் தமிழ் ஊடகத்துறைக்கும் அவர் அளித்த கௌரவமும் பெருமையுமாகக் கருதி நன்றி தெரிவிக்கின்றேன்.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

1. நான் குறிப்பிட்ட விவகாரம் தொடர்பில் சம்பந்தனும் செல்வராசாவும் சீற்றமாக இருக்கின்றார்கள் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன். இது குறித்து அவர்கள் இருவரும் மாவைக்கு இன்னும் தெரிவிக்காமல் இருக்கலாம். அதற்காக அவர்கள் இருவரும் எனக்கு வந்துதான் அவற்றைத் தெரிவிக்க வேண்டும் என்பதுமல்ல. அவற்றை நான் உறுதிப்படுத்தியே தகவல் வெளியிட்டேன்.

2. நேற்றைய என் பத்தியின் பிரதான பேசுபொருளுக்கு மாவை சேனாதிராசா பதில் தரவேயில்லை. அவர் இப்போது பத்துக் கட்சிக் கட்டமைப்பின் சார்பில் புதிய அரசமைப்புக்கான யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, கையளிக்கத் தீர்மானித்திருக்கின்றார். இது தொடர்பில் அவரிடம் பின்வரும் கேள்விகளை முன் வைப்பது பொருத்தமானது என நினைக்கிறேன்.

(அ) இது குறித்து சம்பந்தனுக்குத் தெரியப்படுத்தினீர்களா? அவரின் இணக்கம் இந்த முயற்சிக்கு உண்டா? இது குறித்து பத்திரிகைச் செய்தி மூலம் மட்டுமே அவர் அறிந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் விளக்கக் கடிதத்தில் சம்பந்தனுடன் அன்று பேசினேன், இன்று பேசினேன் என்றெல்லாம் விவரம் கூறுகின்றீர்களே அந்தப் பேச்சுகளில் போது எப்போதாவது இப்படி யாழ்ப்பாணத்தில் உங்கள் தலைமையில் பிற கட்சிகளுடன் கூடி, மாற்று அரசமைப்பு யோசனைத் திட்டம் ஒன்று தயாரிக்கிறோம் என்ற தகவலையாவது அவருக்குக் கூறினீர்களா?

(ஆ) இவ்விடயம் குறித்து கட்சியின் பிற மூத்த தலைவர்களை – எம்.பிக்களான சுமந்திரன், ஸ்ரீதரன், சாள்ஸ் மற்றும் செல்வராஜா, ஏன் கட்சியின் தற்காலிகப் பதில் செயலாளர் சத்தியலிங்கம் – போன்ற யாருக்காவது தெரியப்படுத்தினீர்களா? குறைந்த பட்சம் அவர்களுடன் ஒரு சொல் இது குறித்துப் பேசினீர்களா?

(இ) சரி மூத்த தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாம், கட்சியின் மத்தியகுழு, அரசியல் குழு, பொதுக்குழு போன்ற எதை யாவது கூட்டி ஆராய்ந்தீர்களா? அப்படி ஆராயாமல் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் நீங்கள் மட்டுமே தனித்து முடிவெடுக்கக் கூடி ஒரு சிறிய விவகாரமே இது என்று கருதுகின்றீர்களா? அல்லது உங்களின் இடது, வலது கைகளான சி.வீ.கே.சிவஞானம், சரவணபவன் ஆகியோருடன் மட்டும் கலந்தாலோசித்தால் கட்சியுடன் கலந்தாலோசிததாகி விடும் என்று தீர்மானித்தீர்களா?

(ஈ) இது வரை தமிழரசுடனும் கூட்டமைப்புடனும் முரண்டு பிடித்து நின்ற ஆறு வெளிக்கட்சிகளை ஒன்று சேர்க்க முயல்கின்றீர்கள். நல்ல விடயம். அவற்றுடன் சேர்ந்து புதிய அரசமைப்பு யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும் விழைகின்றீர்கள். அதுவும் நல்ல விடயம். ஆனால் கட்சியினதும், கட்சியின் மூத்த தலைவர்களினதும் ஆலோசனையும் பங்களிப்பும் இல்லாமல் தான்தோன்றித்தனமாக அதை நீங்கள் செய்ய முனைவது சரியா? சரியோ, பிழையோ உங்களுடன் கூட்டு சேர விழையும் ஏனைய கட்சியினர் எல்லோரும் தத்தமது கட்சிகளின் முழு இணக்கத்தோடு தான் அந்த முயற்சிக்கு வந்துள்ளனர். ஆனால் நீங்கள் அப்படியல்ல. தமிழரசினதும் கூட்டமைப்பினதும் முழு ஒப்புதலோடு இந்த முயற்சியில் நீங்கள் இல்லை என்பதே என் கருத்து. அதையே நான் வெளிப்படுத்துகிறேன். புதிய கட்டமைப்பு முயற்சியாகட்டும், அரசமைப்பு யோசனைத் திட்ட தயாரிப்பு எத்தனமாகட்டும், உங்கள் கட்சியின் பூரண ஈடுபாட்டுடன் தான் முன்னெடுக்கப்படுகின்றது என உங்களால் அறுதியிட்டுக் கூறமுடியுமா?

– இவை தமிழரசுத் தலைவரிடம் நான் முன் வைக்கும் வினா.

கடைசியாக ஒரு விடயம். தமிழரசுக் கட்சிக்குள்ளோ, தமிழ்த் தேசியக் கட்சிக்குள்ளோ குழப்பத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏதும் எனக்கு இல்லை.

மாவையும், ஏனையோரும் தத்தமது தேர்தல் வெற்றிகளை இலக்கு வைத்துப் பிரிந்து நின்று மோதிய போது, எதிரி பலவான், அதனால் ஒன்றுபடுங்கள் என்று எனது பேனா மூலம் கெஞ்சியவன் நான். அது போலவே, இப்போது தனிப்பட்ட அரசியல் இலக்குகளுக்காக ஐக்கியம் பற்றி பேசாமல் தமிழர் நலனுக்காக ஐக்கியப்படுங்கள் என்று விடாது வலியுறுத்துபவனும் நானே.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் ஊடகவியளாளன் நான். தேர்தல் தோல்விக்கும் பின்னர் அந்த ஐக்கியத்தைத் தூக்கிப் பிடிக்கும் மாவை எம்மை நோக்கி, தமிழ்த் தேசியக்கட்சிகளுக்குள் குழப்பத்தையும் தமிழ் மக்களிடம் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்த முயற்சிப்பதாகக் கூறுவது அபத்தம். அப்படி குற்றம் சுமத்துவது அரசியல் சின்னத்தனமன்றி வேறில்லை. 'ஐக்கியம் முக்கியம்' என்ற தலைப்பில் பல டசின் தடவைகள் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் நாம் ஆசிரிய தலையங்கத்திலும் பிற பத்திகளிலும் விடாது வலியுறுத்திய போது அவை மாவையின் கண்களில் படாதமையும், இப்போது நாம் அதற்கு மாறானவர்கள் போல அவருக் கும் தோற்றுவதும் பதவியிழப்பால் வந்த பார்வைக் கோளாறன்றி வேறில்லை.

எங்களின் பல செய்திகளை பார்க்கவும் முடிவதில்லை எனும் அவர் கூறியிருக்கின்றார். அதனால் தான் ஐக்கியத்தை வலியுறுத்தும் எங்கள் செயற்பாடு, எழுத்துத் தீவிரம் அவருக்குத் தெரியவில்லைப் போலும்.

மீண்டும் கூறுகிறோம் – ஐக்கியம் முக்கியம். அதுதான் முக்கியம். ஆனால் அது தனிப்பட்டவர்களின் பதவி இலக்குகளையும், பதவியில் இருப்பவர்களை இலக்கு வைப்பதையும் அடிப்படையாகக் கொண்டதாக அமையக்கூடாது.

- மின்னல் -

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாருடன் தொடர்புபட்ட விடயமாகும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் நடைபெற்ற மாவீரர் தின நினைவேந்தலின்போது, பிரிட்டன் நாடாளுமன்றத்தின் முன்பகுதியில் 'கார்த்திகைப் பூ' ஒளிரச் செய்யப்பட்டமை குறித்து கொழும்பு ஊடகமொன்று கேள்வி எழுப்பியுள்ளது.

குறித்த ஊடகத்தின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரிட்டன் தூதரகம் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

பிரிட்டனில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பேரணிகள் உட்பட அனைத்து விடயங்களையும் கையாள்வது பொலிஸாருடன் தொடர்புபட்ட விடயம் எனப் பிரிட்டன் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரிட்டன் தூதரகம் ஒரு வரியில் பதிலளித்துள்ளது எனவும் குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

## 8,000 கைதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சராகப் பதவியேற்றுள்ள லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

மேற்படி விளக்கமறியலில் உள்ள கைதிகளை பிணையில் அல்லது வேறு முறையில் விடுவிப்பது குறித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தற்போது தண்டனை விதிக்கப்பட்ட மற் றும் விளக்க மறியல் கைதிகள் என சுமார் 28 ஆயிரம் பேர் சிறைகளில் உள்ளனர். அவர்களில் எழுபது வீதமானவர்கள் போதைப் பொருள் வழக்குகளில் தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆறுமுகநாவலர் நினைவு வவுனியாவில் அனுஷ்டிப்பு!

ஈழத்தில் சைவத்தை வளர்த்த பெரியாரான ஆறுமுகநாவலரின் 141 ஆவது நினைவு தினம் நேற்று (சனிக்கிழமை) வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள அவரது சிலையடியில் இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அமைக்கப்பட்ட சிலைக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஊடாக, தென்னங்கன்றுகளும் புதிய ஆடைகளும் வழங்கி வைக்கப்பட்டன.





# கிழக்கு மக்களின் பிரச்சினை பற்றி கூட்டமைப்புக்கு அக்கறையில்லை!

## அமைச்சர் வியாழேந்திரன் சாடல்



கிழக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண தமிழத் தேசிய கூட்டமைப்பு கடந்த அரசாங்கத்தில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் நாம் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

வடக்கு , கிழக்கு மாகாண மக்கள் ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். சுபீட்சமான எதிர்கால கொள்கையின் அடிப்படையில் மாகாணங்கள் சுயமாக பொருளாதார மட்டத்தில் முன்னேற்றமடைய வேண்டும். இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

எதிர்த்தரப்பில் உள்ள வடக்கு மற்றும் கிழக்கு அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கிறார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதான பலம் மிக்க எதிர்கட்சியாக காணப்பட்டது.

எனினும் கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கத்தின் வரவு – செலவு திட்டத்துக்கு ஆதரவு வழங்கவும் , அரசாங்கத்துக்கும், பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைகளுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு மாத்திரமே மக்களாணையைப் பயன்படுத்தியது.

கிழக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கூட்டமைப்பு அக்கறை கொள்ளவில்லை. கிழக்கு அபிவிருத்திக்காக உரிய திட்டம் 2021 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப் படும். ஜனாதிபதியால் கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தர முன்னேற்றத்துக்கு பல செயற்திட்டங்களை செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. – என்றார்.

## அரசியல் கைதிகள் தொடர்பில் நேற்று நீதி அமைச்சருடன் பேசினார் அங்கஜன்!

அரசியல் கைதிகளின் விடுதலைக்கு விசேட பொறிமுறையை உருவாக்குதல் தொடர்பாக நீதியமைச்சருடன் நேற்று சனிக்கிழமை பேச்சுகளை முன்னெடுத்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:–

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் 2021 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள கிராமிய உற்பத்திகளை கட்டியெழுப்பினால் நடுத்தர மக்கள் பொருளாதார மட்டத்தில் முன்னேற்றமடைவார்கள்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நெடுகாலமாக பேச்சு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டுள்ள உறவுகளின் உணர்வுகளை அரசியலுக்கு அப்பாற்பட்டு புரிந்துள்ளோம். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசாங்கம் அரசியல் காரணிகளுக்கு அப்பாற்பட்டு நேர்மையான முறையில் சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்.

அரசியல் கைதிகள் என்ற நிலைக்குள் பல தரப்பினர் உள்ளடங்குகிறார்கள். இவர்களின் விடுதலை குறித்து விசேட பொறிமுறை வகுக்கப்பட்ட வேண்டும். இந்த விடயம் தொடர்பாக ஆளும் தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நீதியமைச்சரை சந்தித்தோம்.

ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குவது ஜனாதிபதியின் பிரதான இலக்கு. நீதித்துறையின் கட்டமைப்புக்குள் அரசியல் தலையீடு தாக்கம் செலுத்த தற்போது வாய்ப்பில்லை.– என்றார்.

(மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

## அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்தும் கோரிக்கை நிலுவையிலேயே உள்ளது!

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்துடன் தொடர்புடைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்தும் கோரிக்கை நிலுவையில் உள்ளதாக சட்டமா அதிபர் சிங்கப்பூர் நீதி அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவினால் குறித்த தெளிவுபடுத்தல் அறிக்கை கடந்த (வெள்ளிக்கிழமை) சிங்கப்பூர் நீதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பிணை முறிமோசடி விவகாரத்துடன் தொடர்புடைய, அர்ஜுன மகேந்திரன் மீதான ஒப்படைப்பு கோரிக்கை தொடர்ந்தும் நிலுவையில் உள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும், அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பிலான அறிக்கையை தம்மிடம் நீதி அமைச்சர் அலி சப்ரி கோரியுள்ளார் எனவும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கைது செய்யுமாறு உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமைய, அவரை ஒப்படைக்குமாறு சிங்கப்பூர் நீதி அமைச்சுக்கு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார்.

## வாழ்வகம் விழிப்புலவலுவிழந்தோர் இல்லம்

### புதிய மாணவர் அனுமதி - 2021

வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம், சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2021 ஆம் ஆண்டுக்காகக் கோரப்படுகின்றன. பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும், கல்விக்கான அனைத்து வசதிகளும் கவின் கலைகள், மேலதிக வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், கணனிக் கற்கைகள், தியானம், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பன முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளை உடைய இலங்கை வாழ் தமிழ் மொழி பேசும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 23.12.2020 க்குப் பிந்தாமல் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:** பிள்ளைகளை விடுதியில் அனுமதித்து, சனி, ஞாயிறு தினங்களில் பெற்றோர் சந்திக்க வசதி செய்வதுடன், பாடசாலை விடுமுறை தினங்களில் விரும்பின் தமது இல்லங்களுக்குச் சென்றுவரவும் அனுமதிக்கப்படுவர்.

**தொடர்பு - தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.**
**தொலைபேசி- 021 224 0146, 076 828 6331.**

## மாலை திருமண சேவை

Maalai Matrimony
இணையத்தள திருமண சேவை
www.maalai.com



| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| Reg No 68062<br>1986<br>இந்து கரையார்<br>France (PR)<br>5' 10"<br>உத்திரட்டாதி (மீனம்) | Reg No 78785<br>1994<br>இந்து வேளாளர்<br>France (PR)<br>5' 4"<br>சதயம் (கும்பம்) |
| Reg No 73868<br>1994<br>கிறிஸ்தவ வேளாளர்<br>கரவெட்டி<br>5' 8"<br>கார்த்திகை (இடபம்) | Reg No 92704<br>1984<br>இந்து பள்ளர்<br>நெல்லியடி<br>5' 2"<br>உத்தரம் (கன்னி) |
| Reg No 84983<br>1984<br>இந்து V+K<br>Germany (PR)<br>5' 6"<br>ரோகினி (ரிஷபம்) | Reg No 69108<br>1989<br>இந்து வேளாளர்<br>மல்லாவி<br>5' 2"<br>ஆயிலியம் (கடகம்) |
| Reg No 92609<br>1985<br>இந்து வேளாளர்<br>அச்சுவேலி<br>5' 6"<br>பூரட்டாதி (மீனம்) | Reg No 5942<br>1995<br>இந்து யாழ் வேளாளர்<br>சண்டிலிப்பாய்<br>5' 3"<br>மூலம் (தனுசு) |

எம்மிடம் தரகுக் கட்டணம் இல்லை

Maalai Matrimony
தொடர்புகளுக்கு - 077 408 8241
இணையத் தளம் - www.maalai.com
DMI தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில், யாழ்ப்பாணம்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அரசியல் கைதிகளுக்கு விடிவு வருமா?

நமது தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஒரு முக்கிய திருப்பு முனை வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நீதியமைச்சர் அலி சப்ரியிடம் நேரில் சென்று கூட்டாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், காதர் மஸ்தான், மருதுபாண்டி இராமேஸ்வரன் ஆகியோரே நீதி அமைச்சரை நேரில் சந்தித்து இக்கோரிக்கையை விடுத்தமையோடு அது தொடர்பான மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

ஆளும் தரப்பில் உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவரது கட்சியைச் சேர்ந்த மற்றொரு எம்பியான கு.திலீபன், மட்டக்களப்பு எம்பியான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் சுரேன் ராகவன் போன்றோர் இந்தச் சந்திப்பில பங்கேற்கவில்லையாயினும், அவர்கள் மேற்படி தமிழ் அரசியல் கைதிகளை விரைந்து விடுவித்து, அப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்து இல்லாதவர்கள்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ கூட எதிர்ப்பல்லர் என்பதுதான் நிலைப்பாடு.

ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் இந்தக் கைதிகளை விடுவிக்க வேண்டும், விடுவிப்பேன் என்று இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தெரிவித்திருந்தார்.

பின்னாள்களில், இப்போதைய விளையாட்டுத்துறை, இளைஞர்கள் விவகார அமைச்சரும், பிரதமரின் மகனுமாகிய நாமல் ராஜபக்ஷவும் கூட சிறைக்கு விஜயம் செய்து இக்கைதிகளை சந்தித்தமையுடன் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

ஆகவே, கொள்கை ரீதியில இந்தத் தமிழ் அரசியல் கைதிகளை – நூறுக்கும் குறைவானவர்களை – விடுவிப்பதில் பெரும் முரணிலை இருப்பதாக இல்லை.

ஆனால், அரசியல் இழுபறிகளால் – அதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் விளைவால் – பாவம் நம் அரசியல் கைதிகளின் வாழ்வு தொடர்ந்தும் சிறைக் கம்பிகளின் பின்னால் அவலமாக – அவமாக – தொடர்கின்றது.

அரசுத் தரப்பில் இருக்கும் எம்.பிக்கள் இந்த விடயத்தை ஒன்றுபட்டுத் தம் கையில் எடுத்திருப்பது நல்ல சகுனம். புதிய வாய்ப்புக்கு வாசல் திறக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

கைதிகளை விடுவித்தமைக்கான அரசியல் பெருமை – பெயர் – புகழ் – யாரையும் எட்டட்டும். அதற்காக எந்தக் குழப்பமும் செய்யாமல், விடயம் ஒப்பேற ஏனைய தமிழ் எம்.பிக்கள் – எதிரணியில் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் – இந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

*“அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதியுடன் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தால் சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரையும் அழைத்து இது குறித்துக் கலந்துரையாட முடியும். ”* – என்று நீதியமைச்சர் அலி சப்ரி சுட்டிக்கட்டியிருக்கின்றமை இந்த விடயத்தில் நல்லதோர் வழிகாட்டல்.

அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் நீதி அமைச்சரின் பங்கு முக்கியமானது. இக்கைதிகளை விடுவிக்கும் – மன்னிப்பளிக்கும் – தீர்மானத்தை ஜனாதிபதி முன்னெடுத்தால் அது தொடர்பான விவகாரங்களைக் கையாளும் பெரும் பொறுப்பு நீதி அமைச்சரையே சாரும். அந்தப் பொறுப்பில் சிறுபான்மையினத்தவர் ஒருவர் இருப்பது – அதுவும் ஜனாதிபதி கோட்டாபயவிடம் நெருக்கமாய் பழகி, அவருக்கு சட்ட ரீதியியான ஆலோசனை வழங்கும் தகுதி நிலையில் உள்ள ஒருவர் இப்பதவியில் இருப்பது – அதுவும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், அதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற மனநிலையில் உள்ளவர் அப்பதவியில் இருப்பது – தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாரமாகும்.

கனிந்து வரும் இந்தச் சூழலைக் குழப்பாமல், இம்முயற்சி வெற்றி பெற – அரசியல் கைதிகள் விவகாரம் சுமுகமாக முடிவுக்கு வர – சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புடன் தகைமை பேணி ஒத்துழைக்க வேண்டும்.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த காலத்தில் ஜனாதிபதி மைத்திரியும், பிரதமர் ரணிலும் இந்தக் கைதிகளை விடுவிப்பதற்கு சாதகமான மனநிலையில் இருந்த போதும், நீதியமைச்சர் பதவியில் சிங்கள, பௌத்த பேரினப் போக்குடைய விஜேதாஸ ராஜபக்ஷ இருந்து சகல முயற்சிகளையும் மண்ணாக்கியமை மறக்கக் கூடியதல்ல.

சந்தர்ப்ப சூழ்நிலை பார்த்து – அதுவும் கொவிட் தொற்றுப் பிரச்சினையை ஒட்டி கைதிகளை வீட்டுக்கு அனுப்பும் மனநிலை தெற்கில் தீவிரமடைதிருக்கும் இச்சமயத்தில் – இந்த முயற்சியை அங்கஜன், வியாழேந்திரன் போன்றோர் ஆரம்பித்திருக்கின்றனர். அதைக் குழம்பவிடாமல் பார்த்து ஒப்பேற்றுவது அனைத்துத் தமிழ் அரசியல் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

# புலிகளின் தாக்குதலில் சரத் பொன்சேகா கொல்லப்பட்டிருந்தால் நல்லாய் இருக்கும்!

## சிவாஜிலிங்கம் பதிலடி



மாவீரர் தினத்தன்று புரெவி வீசியிருக்கலாம் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சொன்னமையில் இருந்து அவருடைய கொடூர மனநிலையை வெளிப்பட்டுள்ளதாக வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனால், விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை நடத்திய தாக்குதலில் சரத் பொன்சேகா கொல்லப்பட்டிருப்பாரானால் நல்லாயிருக்கும் என எண்ணும் அளவுக்கு அவர் தமிழ் மக்களின் மனநிலைய மாற்றுவதாக சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான யாழில் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்:-

நேற்றுமுன்தினம் (கடந்த வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் முன்னாள் இராணவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

அதில், குறிப்பாக புரெவி புயல் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினத்தன்று வீசியிருக்கலாம் என்று சொன்னமையில் இருந்து அவருடைய கொடூர மனநிலை வெளிப்பட்டுள்ளது.

கொடூர மன நிலையில் இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் புரிந்தவர், இராணுவம் போர்க் குற்றத்தைப் புரிந்ததென்று இதே இராணுவத் தளபதி கூறியிருக்கிறார்.

இலங்கையில் இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் நடைபெற்றுள்ளன எனவும் 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு குழு தெரிவித்துள்ளது.

அதேபோல், இன்னொரு குழு 70 ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் கணக்கில் வராமலும் உள்ளது என்றும் கூறியுள்ளது.

ஆகவே, இவ்வாறு கொன்றுவிட்டு ஏழாயிரம் பேர் கொல்லப்பட்டனர் எனச் சொல்லுகின்றமை தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற இழிவுபடுத்துகின்ற செயலாகும்.

இதைவிட இன்றைக்கு இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினுடைய கூற்றைப் பார்த்தால், இவர், புலிகளுடைய தற்கொலைப் படைத் தாக்குதலிலே கொல்லப்பட்டிருப்பாரானால் நல்லாயிருக்கும் என்று மக்கள் நினைக்கக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்தமைக்காக தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிகின்றார்கள். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# வலிகாமத்தில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்தவர் சிக்கினார்

## ஒரு தொகுதி நகைகளும் மீட்பு

யாழ். வலிகாமம் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் தொடர் வழிப்பறியில் ஈடுபட்டு வரும் கும்பலைச் சேர்ந்த ஒருவரை காங்கேசன்துறை பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது இந்த நபர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவரிடம் இருந்து ஒரு தொகுதி நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என காங்கேசன் துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக வலிகாம் பிரதேசத்தின் மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை உள்ளிட்ட பல இடங்களில் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளமை குறித்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில்தான், காங்கேசன்துறை பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டிருந்த விசேட நடவடிக்கையில் அக்கும்பலைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மானிப்பாயைச் சேர்ந்தவர் எனத் தெரிகின்றது. அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஒரு தொகுதி நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள்களைத் திருடி அதனைப் பயன்படுத்தி வழிப்பறியில் ஈடுபட்டு பின்னர் ஆங்காங்கே கைவிட்டுச் சென்றுவிடுவதாகவும் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்ததாம். வழிப்பறிக் கும்பலைச் சேர்ந்த மேலும் மூவர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் காங்கேசன்துறை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# விளையாட்டுத் துறைகளில் அரசியல் தலையீடு இல்லை!

## நாமல் திட்டவட்டம்

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் விளையாட்டு துறைக்குள் அரசியல் தலையீடு இல்லை என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று (சனிக்கிழமை) கருத்து வெளியிட்ட அவர், விளையாட்டு அமைப்புகளின் நிகழ்வுகளில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்த மட்டுமே அரசாங்கம் ஈடுபடும் எனக் கூறினார்.

இருப்பினும் இலங்கை கிரிக்கெட் சபை உள்ளிட்ட விளையாட்டு அமைப்புகள் அரசியல் தலையீடு இல்லாமல் செயற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை விளையாட்டு தொடர்பான புதிய சட்டம் தேவை என்றும், புதிய விளையாட்டுச் சட்டத்தை உருவாக்கும் செயன்முறை தற்போது நடைபெற்று வருவதாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு லங்கா பிரிமியர் லீக் போட்டி தொடருக்கு விளையாட்டு அமைச்சால் எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர், இலங்கை கிரிக்கெட் சபையால் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

16 2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence
JSAC
பெண்கள் பாரிய சுரண்டலுக்கும்
துன்புறுத்தலுக்கும் உட்படுகிறார்கள்.
பயிரை மேய்ந்த வேலிகள்
சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டும்.
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

# புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய விரும்பினால் தெற்கிலும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம்!

## அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



வடக்கு கிழக்கில் பிரதான தொழிற்சாலைகளை மீண்டும் பலப்படுத்தி தமிழ், முஸ்லிம் மக்களுக்கான முழுமையாக வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ சபையில் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை செய்ய விரும்பினால் வடக்கில் மாத்திரம் அல்ல தெற்கில் வேண்டுமானாலும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட முழுமையான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கத் தயாராக உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, கைத்தொழில் வர்த்தக அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகள் மீதான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

வடக்கு – கிழக்கில் உள்ள தொழிற்சாலைகளை மீளவும் இயக்கி நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பை பெற்றுக்கொள்ளவே நாம் வேலைத்திட்டங்களை உருவாக்கியுள்ளோம். வாழைச்சேனை தொழிற்சாலை, ஒட்டுச்சுட்டான் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் உள்ளிட்ட பிரதான தொழிற்சாலைகளை மீள் அபிவிருத்தி செய்வதுடன், பரந்தன் இரசாயன தொழிற்சாலையையும் கட்டியெழுப்பும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். குறிப்பாக பரந்தன் இரசாயன தொழிற்சாலை உள்ள பிரதேசத்தை இரசாயன வலயமாக மாற்றியமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முறையான சூழலியல் ஆய்வுகளை செய்தும், சுற்றுச்சூழல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் அதற்கு ஏற்றால் போல் இரசாயன வலயம் உருவாக்கப்படும். இந்த வேலைத்திட்டங்களில் வடக்கு கிழக்கு மக்களுக்கான பணிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும். இதில் வடக்கு கிழக்கு மக்கள் எந்த சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.

வடக்கு மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் தொடர்பாக பல காரணிகளை சிறிதரன் எம்.பி. சபையில் தெரிவித்தார்.

தொழிற்சாலைகளை உருவாக்கி தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என அவர் தெரிவித்தமையை நான் முழுமையாக வரவேற்கிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலர் வாய்களில் இருந்து இவ்வாறு மக்களின் உண்மையான பிரச்சினைகள் வெளிவராது. அதேபோல் வெளிநாடுகளில் உள்ள தமிழ் செல்வந்தர்கள் இலங்கையில் முதலீடுகளில் விருப்பம் காட்டுவதாகத் தெரிவித்தார்.

அவ்வாறான முதலீட்டாளர்கள் இருப்பார்களானால் எம்முடன் தொடர்புபடுத்திவிடுமாறு சிறிதரனிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறான தமிழ் முதலீட்டாளர்கள் வடக்கில் மாத்திரம் அல்ல தெற்கில் வேண்டுமானாலும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட நாம் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக உள்ளோம்.

தேசிய தொழிற்சாலைகளை பலப்படுத்த அரசாங்கம் துரிதமாக வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. புதிய தொழில் பேட்டைகளை உருவாக்க நாம் தீர்மானம் எடுத்துள்ளோம். ஏறாவூர் பகுதியில் துணி தொழிற்சாலையொன்றும் உருவாக்கப்படவுள்ளது. தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகமாக இந்த பகுதிகளில் வாழ்கின்றனர். ஆகவே ஐந்தாயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்கி அவர்களுக்கு கொடுக்க முடியும். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையையும் நாம் மீண்டும் உயிர்ப்பிக்கவுள்ளோம்.

இதுவும் அப்பகுதி மக்களுக்கான வலமாக மாற்றுவோம். சகல அடிப்படை வசதிகளையும் வழங்குவோம். தொழிற்சாலை கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.– என்றார்.

# தனியார் வைத்தியசாலைகளிலும் இனி கொரோனாவுக்குச் சிகிச்சை?

கொவிட் – 19 நோயாளிகள் விரும்பினால் அவர்களை தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்புகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் கொவிட் -19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் கடந்த வியாழக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

ஆலோசகர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களைக் கொண்ட மருத்துவ நிபுணர்களின் உயர் மட்டக் குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கொவிட் – 19 நோயாளிகள் விரும்பினால் அவர்களைத் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்கான வாய்ப்புகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற விரும்பும் வைரஸ் பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கு இது போன்ற வாய்ப்புகள் இருக்க வேண்டுமென்று மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டமையுடன், இதன் மூலம் அரச துறைகளில் நிலவும் நெரிசலைக் குறைக்கவும், குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு அதிக இடத்தை உருவாக்கவும் முடியுமெனத் தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக முடிவொன்றை எடுப்பதற்கு முன்னர், குறித்த ஆலோசனைகள் விரைவில் நொப்கோ பணிக்குழு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்று லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா அவர்களுக்கு உறுதியளித்தார்.

பின்னர் இந்த மருத்துவக் குழுவினர் கொவிட் – 19 கட்டுப்பாட்டுப் பணிகள் தொடர்பான தற்போதைய நிலைமையை நொப்கோ தலைவரிடமிருந்து அறிந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் அறுவை சிகிச்சை நிபுணத்துவ ஆலோசகர் வைத்தியர் மாயா குணசேகர, ஆலோசகர் வைத்தியர் (பேராசிரியர்) அர்ஜுன டி சில்வா, மகளிர் மருத்துவ நிபுணர் (பேராசிரியர்) ஹேமந்த தோடம்பஹல, உடற்கூறியல் நிபுணர் (பேராசிரியர்) பிரசாத் கட்டுலந்த மற்றும் ஆலோசகர் வைத்தியர் எராங்க நாரங்கொட ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தூர பிரதேச ரயில் சேவைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பம்!



தூர பிரதேச ரயில் சேவையை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கசுன் சாமர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த ரயில் நிலைய மட்டத்தில் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ரயில் சேவையில் ஈடுபடும் ரயில்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய புத்தளம் ரயில் வீதியில் 2 ரயில் பயண சேவையும், களனி வழி பாதையில் 2 ரயில் பயண சேவையும், கரையோர பகுதியில் 4 பயண சேவையும், வடக்கு மற்றும் பிரதான ரயில் பாதையில் 6 பயண சேவையும் ஈடுபடும்.

அடுத்த வாரம் முதல் தூர போக்குவரத்து ரயில் சேவையை மீள ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ரயில் சேவையில் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை முழுமையாக செயற்படுத்துமாறு சுகாதார தரப்பினருக்கும், ரயில் திணைக்களத்துக்கும் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.

# கொரோனாக் குணமடைவு 20 ஆயிரத்தைக் கடந்தது!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்தை கடந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 652 பேர் குணமடைந்துள்ள நிலையில் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 90 ஆக உயர்ந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 26 ஆயிரத்து 559 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 6 ஆயிரத்து 339 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 390 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 130 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் குண்டு தாக்குதல் விவகாரம் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில்!

## நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையில் அரசாங்கம் மந்தகதியில் செயற்படுவதாக எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நிரோன் பெர்னான்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த குழுநிலை விவாதத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு கொரோனா மட்டுமன்றி, ஈஸ்டர் தாக்குதலும் பிரதான காரணமாக இருக்கிறது.

இதனை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தற்போது அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும், கொழும்பு பேராயர் கர்தினல் மெல்கம் ரன்ஜித் ஆண்டகை, இந்த விசாரணை தொடர்பாக கவலை வெளியிட்டிருந்தார். இதனை அரசாங்கம் மூடி மறைத்துவிடக்கூடாது என்று வலியுறுத்தியிருந்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தியே இந்த அரசாங்கத்தை மக்கள் ஆட்சிக்கு அமர்த்தினார்கள்.

எனினும், தேர்தல் காலத்தின்போது கூறிய வேகத்தைவிட அரசாங்கம் தற்போது குறைவாகவே செல்கிறது என்பதே மக்களின் பொதுவான நிலைப்பாடாக இருக்கிறது.

அரசியல் அழுத்தங்கள் இன்றி இந்த விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதுதான் பேராயர் உள்ளிட்ட அனைவரதும் கோரிக்கையாகும்.

இதனை நாம் அரசியலாகக் கருதவில்லை. இதனை வைத்து எவரும் அரசியல் செய்யவும் முற்படக்கூடாது. எனினும், யார் இந்தக் குண்டுத் தாக்குதலின் பின்னணி என்ற உண்மை தெரியவேண்டும். இது ஒன்றுதான் எமது நோக்கமாகும். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்று டிசெம்பர் 06
# சண்முகம் சபேசன்
# நினைவரங்கு

- முருகபூபதி -






ஆஸ்திரேலியாவில் விக்ரோரியா மாநிலத்தில் மெல்பனை தளமாகக்கொண்டிருந்து இயங்கிய தமிழ்ச் சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக. குழு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மற்றும் 3 CR வானொலி தமிழ்க்குரல் ஒலிப்பரப்புச்சேவை முதலானவற்றில் நீண்டகாலமாக ஈடுபட்டுழைத்திருக்கும் சண்முகம் சபேசன் கடந்த மே மாதம் 29 ஆம் திகதி (29 05 2020) ஆம் திகதி அதிகாலை மெல்பனில் மறைந்தார்.

மெல்பனில் Fitzroy Smith Street இலிருந்து 1976 ஆம் ஆண்டு முதல் இயங்கும் 3 CR சமூக



வானொலி கலையகத்திற்கு கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேல் வாராந்தம் சென்று தமிழ் ஒலிபரப்பை நிகழ்த்தியவர் சபேசன்.

அவ்வாறு அவர் முக்கியத்துவம் வழங்கிய மற்றும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம். விக்ரோரியா தமிழ்ச் சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக. குழு, தமிழ் அகதிகள் கழகம், இலங்கை மாணவர் கல்வி நிதியம், ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், பாரதி பள்ளி, கேசி தமிழ்மன்றம் உட்பட பல சமூக அமைப்புகளின் நிகழ்ச்சிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து ஒலிபரப்பினார்.

அத்துடன், ஆஸ்திரேலியாவில் கலை, இலக்கியம், கல்வி மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்ட ஆளுமைகள் மறைந்த வேளைகளில் அவர்கள் பற்றிய நினைவுரைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கியவர்.

சபேசன், தமிழ்த்தேசியத்திலும் பேச்சுவார்த்தை மற்றும் ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத் தொடர்ந்து ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வேலுப்பிள்ளை பிரபாகரனிடத்திலும் ஆழ்ந்த நேசம் கொண்டிருந்தவர்.

பதினொரு வருடங்களிற்கு முன்னர், மே மாதத்தில் நேர்ந்துவிட்ட ஈடுசெய்யப்படமுடியாத இழப்புகளினால் கலங்கியிருந்த சபேசனும் 2020 மே மாதம் நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார்.

2009 கொடுந் துயரத்தை தீவிரமான வாசிப்பிலிருந்து கடந்து செல்வதற்கு முயன்றவர். எனினும்



தீராத துயரம் அது. எனதும் இவரதும் நண்பருமான கவிஞர் புதுவை ரத்தினதுரை, இவரை வன்னியில் சந்தித்தபோது எனக்காக கொடுத்தனுப்பிய இயக்கத்தின் தமிழ்த்தாய் வெளியீடான 'நினைவழியா நாட்கள்' கவிதைத் தொகுதியை எடுத்து வந்து தந்தமையுடன், நண்பர் யாதவன் ஊடாக பெற்ற புதுவையின் நேர்காணல் பதிவையும் 3 CR வானொலி தமிழ்க்குரலில் ஒலிபரப்பினார்.

**யு.கே.க்குப்போக யூ.ரி.ஏ. ஏறாமல்**
**ஏ.கே. தூக்கி இறந்தவர்கள் எத்தனைபேர்?**
**இங்கே பற்பலர் பேசிக்களித்தனர்**
**எம்நாடு எரிகையில் ஓடிப்பறந்தனர்**
**சங்கமாடிய தமிழ் எனப்பேசிய**
**தம்பிமார் எல்லாம் கடலைக்கடந்தனர்**

என்று புலம் பெயர்ந்தவர்கள் பற்றி கவிதை பாடிய கவிஞர் புதுவை ரத்தினதுரை எழுதிய 'புலுனிக்குஞ்சுகளும் பூவரசம் வேலியும்' என்ற நூலையும் புலம்பெயர்ந்த தமிழர்கள் வெளிநாடுகளில் வெளியிட்டு வைத்தபோது, மெல்பனிலும் அந்த நூலின் வெளியீட்டு விழாவை முன்னின்று நடத்தியவர்தான் சபேசன்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் குழு



வெளியிட்ட 'இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்' என்ற நூல் எனக்கு கிடைத்தபோது, அதுபற்றிய எனது வாசிப்பு அனுபவத்தையும் தனது வானொலி ஒலிபரப்பில் சபேசன் சேர்த்துக்கொண்டார். அந்த நூலை தமிழீழ விடுதலைப்போரில் முதற்களப்பலியான இஸ்லாமியத் தமிழ் வீர மறவன் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் லெப்டினன்ட் ஜுனைதீனுக்கு சமர்ப்பணம் செய்திருந்தனர்.

அக்கட்டுரை பின்னர் கொழும்பு 'தினக்குரல்' வார இதழிலும் வெளியானது. மூத்த இலக்கிய ஆளுமைகளான மகாகவி பாரதி, புதுமைப்பித்தன், கண்ணதாசன், ஜெயகாந்தன், அகிலன், தி. ஜானகிராமன், எஸ்.பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, இரசிகமணி கனகசெந்திநாதன், கவிஞர் அம்பி முதலானோரின் சுவாரசியமான மறுபக்கங்கள் குறித்து நான் எழுதியிருந்த தொடரையும் தனது 3 CR தமிழ்க்குரலில் அவரே வாசித்து ஒலிபரப்பினார்.

சபேசன், தமிழ்நாட்டின் தமிழ் உணர்வாளர்கள் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பழ. நெடுமாறன், ஓவியர் புகழேந்தி, கவிஞரும் திரைப்பட வசன கர்த்தாவுமான அறிவுமதி, இயக்குநர் தங்கர்பச்சான், கவிஞர் வைரமுத்து ஆகியோருடனும் நட்புறவு கொண்டிருந்தவர்.

மெல்பனுக்கு சுப. வீரபாண்டியன், ஈழவேந்தன், உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த வண. பிதா இமானுவேல் அடிகளார் உட்படப் பல தமிழ் உணர்வாளர்கள் வருகை தந்த சந்தர்ப்பங்களில் சபேசனின் இல்லத்தில் அன்பான உபசரிப்பில் திளைத்திருக்கிறார்கள்.



அரசியலில் கலை, இலக்கியத்தில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுடனும் சிநேகபூர்வமாக பழகும் மென்மையான இயல்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்தவர் சபேசன்.

நவீன தமிழ் இலக்கியத்தில் இவருக்கிருந்த தீவிர நாட்டத்தினால், தரமான இலக்கியச் சிற்றிதழ்களையும் நூல்களையும் தருவித்து படிப்பவர். சென்னையில் நடைபெறும் புத்தகத் திருவிழாவுக்கும் சென்று வந்து

> **“சபேசன், தமிழ்த் தேசியத்திலும் பேச்சுவார்த்தை மற்றும் ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத் தொடர்ந்து ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வேலுப்பிள்ளை பிரபாகரனிடத்திலும் ஆழ்ந்த நேசம் கொண்டிருந்தவர். பதினொரு வருடங்களிற்கு முன்னர், மே மாதத்தில் நேர்ந்துவிட்ட ஈடுசெய்யப்பட முடியாத இழப்புகளினால் கலங்கியிருந்த சபேசனும் 2020 மே மாதம் நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார்.”**

தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்வார்.

இவரது வாசிப்பு அனுபவத்தின் தீவிரம், இவரை புதுச்சேரியில் வதியும் கரிசல் இலக்கிய வேந்தர் என வர்ணிக்கப்படும் மூத்த படைப்பாளி கி. ராஜநாரயணன் அவர்களையும் தேடிச்சென்று உறவாட வைத்தது.

ஈழத்து இலக்கியத்தின் மீதும் புகலிட இலக்கிய முயற்சிகள் குறித்தும் ஆர்வம் காண்பிக்கும் கி. ரா. அவர்கள், சபேசனுடனான அந்த சந்திப்பிற்குப் பின்னர், தீராநதி இதழில் ஒரு கட்டுரையும் எழுதினார். அதற்கு Cover Story முக்கியத்துவமும் வழங்கப்பட்டிருந்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# சகல தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்குமாறு அரச தரப்பு தமிழ் எம்.பிக்கள் கூட்டாகக் கோரிக்கை

## நிதி அமைச்சரைச் சந்தித்து மகஜர் கையளிப்பு





கொழும்பு, டிசெ. 06

நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் நிதி அமைச்சர் அலி சப்ரியிடம் கூட்டாகக் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மகஜர் ஒன்று நேற்றையதினம் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. மகஜரை நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான் மற்றும் மருதபாண்டி இராமேஸ்வரன் ஆகியோர் நிதி அமைச்சரிடம் கையளித்தனர்.

தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தால், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரையும் அழைத்து இதுபற்றிக் கலந்துரையாட முடியும் என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசியல் கைதிகள் விடயத்தில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டால் இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அமைச்சர் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி புதிய அரசமைப்புத் தயாரிப்பு விடயத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பேசும் உறுப்பினர்களின் நிலைப்பாடுகளும் உள்வாங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், இது தொடர்பில் எழுத்துமூலமான யோசனைகளை முன்வைக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கைதிகள் விடுதலை மாத்திரமன்றி சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பேசும் உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதியிடம் எடுத்துச் செல்வதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். – என்று தெரிவிக்கப்பட்டது.

# மஹர சிறைச்சாலைக் கைதிகள் பயன்படுத்திய போதை மாத்திரை பற்றிய விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 06

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலின்போது கைதிகள் பயன்படுத்தினர் எனக் கூறப்படும் போதை மாத்திரைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலை விவகாரம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்டிருந்த கலவரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும், சிஐடியினர் இதுவரையில் 56 பேரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

மேலும், கைதிகள் பயன்படுத்தினர் எனக் கூறப்படும் மாத்திரைகள் அனைத்தும், விசேட நிபுணர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த விடயம் தொடர்பான நிபுணத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கலவரத்தால் மஹர சிறைச்சாலையின் சொத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதம், பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் 11 கைதிகள் மரணித்துள்ளமையுடன் 108 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். குடாநாட்டில் 57,513 பேர் பாதிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தைத் தாக்கிய புரெவி புயல் மற்றும் அதன்பின்னர் பெய்த அடைமழை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 17 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 57 ஆயிரத்து 513 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் 2 ஆயிரத்து 535 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும், அவற்றில் 62 வீடுகள் முழுமையாகச் சேதமடைந் துள்ளன எனவும் யாழ். மாவட்ட செயலகத்தால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு நேற்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களில் 1,072 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயி ரத்து 687 பேர் 33 நலன்புரி நிலையங்க ளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நுவரெலியா – தண்டுகலா பகுதிக்குள் உள் நுழைய, வெளிசெல்லத் தடை!

நுவரெலியா – ஹற்றன் நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்டுகலா தோட்டத்தின் மேல்பிரிவில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து தண்டுகலா பகுதி முடக்கப் பட்டுள்ளதுடன் அங்கிருந்து எவரும் வெளியேறுவதற்கும் உள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆக்ரோயா பகுதியிலும் கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தண்டுகலா தோட்டத்தில் ஏற்கனவே ஐந்து கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதனையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.


இந்நிலையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று (சனிக்கிழமை) வெளியாகின. அதில் 16 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களை, கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கு சுகாதார அதிகாரிகளால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் தொழில் செய்த நிலையில், ஊர் திரும்பியவர்கள் மூலமே இவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வெள்ளவாய்க்காலை மூடியமையால் வீடுகளுக்குள் புகுந்தது வெள்ள நீர்!

## யாழ்.கந்தர்மடத்தில் சம்பவம்





யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட கந்தர்மடம், இலுப்பையடிச் சந்திப்பகுதியிலுள்ள வெள்ளவாய்காலை மூடி வீதி அமைக்கப்பட்டதால், நேற்று (சனிக்கிழமை) அதிகாலை தொடர்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து, மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

மேலும், வீடுகளின் பெரும் பகுதி வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் பஸ் நிலையம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக 17 ஆயிரத்து 243 குடும்பங்களை சேர்ந்த 57ஆயிரத்து 513 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்து பிரிவின் உதவி பணிப்பாளர் ரீ.என். சூரியராஜா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி மாவட்டப் பாடசாலைகள் மேலும் ஒரு வாரத்துக்கு பூட்டு!

கண்டி மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் மேலும் ஒரு வாரத்துக்கு மூடப்படுமென மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கொரோனா தொற்று பாதிப்பு காரணமாக நாட்டின் பல பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கண்டி நகர எல்லைக்குட்பட்ட 45 பாடசாலைகளும் அக்குரன பகுதியில் உள்ள 5 பாடசாலைகளும் மூடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்தப் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை மூடப்படும் மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இன்று டிசம்பர் 06 – பேராசிரியர் கைலாசபதி நினைவு தினம். கைலாசபதியை மீள வாசிப்போம் – இன்று முதல் ஐந்து நாள்கள் தொடர் பன்னாட்டு கருத்தரங்கு நடைபெறுகிறது. அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# காலமும் கணங்களும்

முருகபூபதி

நம்மிடத்தில் - நம்மவர்களைப் பற்றிய எதிர்பார்ப்பு ஒன்று உண்டு.

*'அவருக்கு கடிதம் எழுதினேன் – பதிலே இல்லை.'*

*'கடிதமா ? ஐயோ! எழுத நேரம் எங்கே கிடைக்கிறது? அமர்ந்து கடிதம் எழுதுவதற்கு நேரம் தேடி போராடுகின்றோம்.'*


*'கோபிக்க வேண்டாம். உங்கள் கடிதம் கிடைத்தது. பதில் எழுத முடியாமல் போய்விட்டது. அவ்வளவு பிஸி.'*

– இவ்வாறு உரையாடுபவர்களை நாம் பார்த்திருக்கின்றோம்.

அது எப்பொழுது?

மி.மு. காலத்தில். அதென்ன மி.மு? மின்னஞ்சலுக்கு முன்னர் நாம் வாழ்ந்த காலத்தில். தற்பொழுது மி.பி. காலத்தில் வாழ்கின்றோம். அதாவது மின்னஞ்சலுக்கு பிற்பட்ட காலத்தில். மின்னஞ்சல் தந்த கொடைகள் முகநூல் – டுவிட்டர் – ஸ்கைப். இனிவரும் காலத்தில் மேலும் புதிய சாதனங்கள் வரலாம்.

ஆனால் – இந்த மென்பொருள் சாதனங்கள் எல்லாம் வருவதற்கு முன்பே இந்தப் பத்தியின் தொடக்கத்தில் குறிப்பிட்ட சமாதானங்களைக் கூறி தப்பிப் பிழைக்




காமல், தனக்கு வரும் கடிதங்களுக்கெல்லாம் தளராமல் பதில் கடிதம் எழுதிய ஒருவர் நம் மத்தியில் வாழ்ந்து மறைந்தார் என்பதை எத்தனை பேர் அறிந்திருப்பார்கள்?

அவர்தான் பேராசிரியர் கைலாசபதி.

கடிதம் எழுதுவதும் ஒரு கலைதான் என உணர்த்திய இலக்கியவாதியாக அவரை நான் இனம் காண்கின்றேன்.

தனக்கிருந்த பல முக்கிய பணிகளில் ஒன்றாகக் கடிதங்கள் எழுதுவதையும் அவர் கருதியிருக்க வேண்டும். பல வருடங்களுக்கு முன்னர் கைலாசபதி எழுதிய கடிதங்கள் பலவற்றை மிகவும் பத்திரமாக பாதுகாத்து ஒரு கோவையில் பிணைத்து வைத்திருந்த கவிஞர் முருகையனிடம்தான் கைலாசபதியைப் பற்றிய இந்த உண்மையை அறிந்து கொண்டேன்.

இதுவரையில் கைலாசபதி தமது நண்பர்களுக்கு இலக்கிய நயத்துடன் எழுதிய கடிதங்கள் நூலாக வெளிவரவில்லை. கைலாஸின் நண்பர்கள் இணைந்தால் இப்படியொரு முயற்சியிலும் இறங்கிப் பார்க்கலாம்.

எழுத்தாளர்களுக்கு ஆலோசனை கூறும், அபிப்பிராயம் தெரிவிக்கும் கருத்துக் கருவூலங்களான அவை எதிர்காலத்தில் தொகுக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் எனக்குண்டு.

'இன்றைய மின்னஞ்சல் யுகத்தில் மறைந்துவரும் கடிதக்கலை' என்று சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதனை பல ஊடகங்கள் மறுபிரசுரம் செய்திருந்தன. அக்கட்டுரையிலும் கைலாசபதியின் கடிதக்கலையைத்தான் விதந்து பதிவு செய்திருக்கின்றேன்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டை கொழும்பில் 1975 காலப் பகுதியில் நடத்துவதற்கு ஆலோசித்துக்கொண்டிருந்த வேளையிலேயே கைலாஸ் அவர்களை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் சந்தித்தேன்.

அவர் பெரிய எழுத்தாளர். பேராசிரியர். அவருக்கு அருகில் சென்று பேசுவதற்கு தயங்கி ஓரமாக அமர்ந்திருந்தேன்.

ஆலோசனைக் கூட்டம் முடிந்த பிற்பாடு, இன்று ஒரு புதுமுகத்தைக் காண்கின்றேன். எனது பெயர் கைலாசபதி உங்கள் பெயர் என்ன? என்று என்னருகில் வந்து தோள்பற்றி அவர் கேட்டபோது, உங்களைத் தெரியும். பல இலக்கியக் கூட்டங்களில் நீங்கள் பேசியதைப் பார்த்திருக்கின்றேன் - எனக்கூறி என்னை அறிமுகப்படுத்தினேன்.

இச்சந்திப்பின் பின்னர் பல தடவைகள் நாம் பேசிக்கொண்டோம். எனினும் நீண்ட கலந்துரையாடலாக அமையவில்லை.

சிறுகதைகளும் நாவல்களும் படிப்பதில் நான் கொண்டிருந்த ஆர்வம் படிப்படியாக விமர்சனங்களைப் படிப்பதற்கும் தாவியதற்கு கைலாசபதியே காரணம்.

ஆரம்ப காலங்களில் சிலரது விமர்சனக் கட்டுரைகள் எனக்குப் புரியவில்லை. அவற்றைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் இருந்தமையால் படிப்பதை தண்டனையாகக் கருதி, அந்தப் பக்கத்தைப் பார்ப்பதையே தவிர்த்துக் கொண்டேன்.

ஆனால், கைலாசபதியின் எழுத்துக்கள் எளிமையாக இருந்தமை கண்டு அவற்றைப் படிப்பதில் ஆர்வம் வளர்ந்தது.

கைலாசபதியின் விமர்சனங்கள் எளிய முறையில் படிப்பவர்கள் புரிந்து கொள்ளத்தக்கதாய் அமைந்தமைக்கு அவர் ஓர் பத்திரிகை ஆசிரியராக வாழ்ந்தமையும் காரணம் என்று பின்னாளில் வெளியான முடிவுகள் முற்றிலும் சரியானவை.

கைலாஸ், கவிஞர் மஹாகவி உருத்திரமூர்த்தி, சிந்தனையாளர் மு.தளையசிங்கம், எழுத்தாளர் எஸ்.பொ. முதலானோரை ஆய்வு செய்யவில்லை, விமர்சிக்கவில்லை, அவர்களை ஏனோ புறம் ஒதுக்கி விட்டார் என்ற குற்றச்சாட்டு இன்றும் நிலவுகின்றது.

இக்குற்றச்சாட்டு ஆய்வுக்குரியது. மஹாகவி உருத்திர மூர்த்தி தவிர்ந்த ஏனைய இருவரும் கைலாசபதியை விமர்சித்தவர்கள்தான்.

மு.தளையசிங்கம் நயமாகவும், எஸ்.பொ. வக்கிரமாகவும் கைலாசபதியை விமர்சித்திருக்கிறார்கள். இந்த விமர்சனங்களுக்கெல்லாம் கைலாஸ் பதில் கூறியதில்லை. சமகாலத்தில் கைலாஸை ஜெயமோகனும் விமர்சிக்கிறார். அந்த விமர்சனங்களுக்கெல்லாம் கைலாஸின் அபிமானத்துக்குரிய அவரது இலக்கிய மாணவர்களே பதில் கொடுத்தார்கள்.






கைலாசபதியின் எழுத்தைப் போன்றே அவரது மேடைப் பேச்சுக்களும் எளிமையானவை. பார்வையாளர்களை மாணாக்கர்களாகக் கருதும் தன்மையை ஒத்ததாக அவரது மேடைப் பேச்சுக்கள் அமைவதுண்டு. அவரின் எளிமையான எழுத்து நடைபற்றி பேராசிரியர் துரை மனோகரன் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கலாம்.

கைலாசபதியும் தெளிவினையே பிரதான இலக்காகக் கொண்டு எழுதியவர். கைலாசபதியின் நடை என்று கூறத்தக்க அளவுக்கு தமக்கெனத் தனித்துவம் வாய்ந்த நடையொன்றினை அவர் கையாண்டார். எளிமையும் கனதியும் கவர்ச்சியும் நிறைந்த நடையாக அது மிளிர்கிறது. கவிதையில் பாரதியும், சிறுகதையில் புதுமைப்பித்தனும் ஏற்படுத்தியிருப்பது போன்ற நடைக் கவர்ச்சியை தமது எழுத்தின் வாயிலாக கைலாசபதியும் ஏற்படுத்தினார். சான்றுகளை கோவைப்படுத்தி தர்க்கரீதியாகத் தெளிவுடனும் மனங்கவரும் முறையிலும் எழுதிச் செல்வது கைலாசபதியின் பாணியாகும்.

( நூல் - பன்முக ஆய்வில் கைலாசபதி)

இ.மு.எ.ச. தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டை ஒழுங்கு செய்திருந்த வேளையில் அது தொடர்பான பிரசாரக் கூட்டம் ஒன்றுக்கு நீர்கொழும்பு வருமாறு கைலாசபதியை அழைத்தேன். மறுப்புத் தெரிவிக்காமல் பஸ் ஏறி புறப்பட்டு வந்தார். நீர்கொழும்பில் சில அன்பர்களுக்கு இந்தக் கூட்டம் உவப்பாக இருக்கவில்லை.

முதல் நாளே சில எதிர்ப்பு சுவரொட்டிகளை கூட்ட மண்டபத்தின் முன்னாலிருந்த சுவரில் ஒட்டி விட்டனர். இரவோடிரவாகத் தன்னந்தனியாக நின்று அச்சுவரொட்டிகளை அகற்றினேன். கூட்டத்தை ரத்துச் செய்யுமாறு சில நண்பர்கள் தனிப்பட்ட முறையில் கூறினர்.

முன்வைத்த காலைப் பின்னிழுக்க விரும்பாத நான், திட்டமிட்டவாறு கூட்டம் நடைபெறும் என்றேன்.

நண்பர் மு.பஷீர் தலைமை. கைலாசபதி மு.நித்தியானந்தன், பிரபல சிங்கள எழுத்தாளர் குணசேனவிதான ஆகியோர் உரை நிகழ்த்த வந்தனர்.

இறுதிப் பேச்சு கைலாஸினுடையது. சபை அமைதியாக செவி மடுத்தது. அந்தக் காலப் பகுதியில் தான் எம்.ஜி.ஆர் – தி.மு.க.வை விட்டு வெளியேறி அ.தி.மு.க ஆரம்பித்து திண்டுக்கல் இடைத் தேர்தலில் அவரின் புதிய கட்சி அதிகப் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டியிருந்தது.

எம்.ஜி.ஆர். ஒரு மலையாளி என்றும் தமிழ்நாட்டை தமிழன் தான் ஆளவேண்டும் என்றும் துவேஷம் பேசத் தொடங்கியிருந்தது கலைஞரின் தி.மு.க.

கைலாசபதி தமது பேச்சிற்கிடையே இந்தத்

(09ஆம் பக்கம் பார்க்க)

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)



குறித்தும் சிலேடையாகக் கூறினார். எம்.ஜி.ஆரின் முகத்தைக் காட்டி வாக்குகள் பெற்ற தி.மு.க. இன்று அவர் வெளியேறியதும் மலையாளி கோஷம் எழுப்புகிறது என்றார்.

தீவிரவாதிகள் சந்தர்ப்பவாதிகளாக மாறுவார்கள் என்பதற்கு இதனை உதாரணமாகவும் குறிப் பிட்டார்.

கைலாசபதி பேசிக் கொண்டிருக்கும்போது மண்டபத்தின் கூரையை நோக்கி கற்கள் வீசப்பட்டன. நெஞ்சுறுதிமிக்க கைலாஸ் தொடர்ந்து பேசி அமர்ந்தார். தெருவிலே எம்மோடு நடந்து பஸ் நிலையம் வந்து அன்று இரவு கொழும்புக்குப் பயணமானார்.

மறுநாள் கொழும்பில் வெளியான அனைத்து தமிழ்ப்பத்திரிகைகளிலும் முகப்பில் தலைப்புச் செய்தியாக புதிய யாழ். பல்கலைக்கழக வளாகத்தின் தலைவராக கைலாசபதி தெரிவு செய்யப்பட்டார் என்றிருந்தது.

கைலாஸ் மறைந்துவிட்ட பின்பு அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் பல வெளியாகிவிட்டன. அவரது பல்துறை சார்ந்த பன்முகப்பட்ட பணிகள் இன்றும் ஆய்வு செய்யப்படுகின்றன.

இலங்கையிலும் தமிழகத்திலும் அவரது கருத்துக்கள் கனதியான அந்தஸ்தைப் பெற்றுள்ளன. பாரதியியல் என்ற ஆய்வு முறையை அறிமுகப்படுத்தியவராகவும் கருதப்படுகின்றார்.

இத்தனை சிறப்புகளுக்கும் சொந்தக்காரரான கைலாசபதியை தூற்றியும் அவதூறு பொழிந்தும் அவர் காலத்திலேயே சிலர் பேசினர் எழுதினர். எனினும் அவற்றுக்கெல்லாம் பதில் அளித்து காலத்தை விரையம் செய்யாமல் கருமமே கண்ணாக வாழ்ந்து இலக்கிய விமர்சனப் பரம்பரை ஒன்றை அவர் உருவாக்கினார்.

அவரது கருத்துக்களுடன் முரண்பட்டவர்களும் கூட தமது படைப்புகள் தொடர்பாக கைலாசபதி என்ன சொல்கிறார்? என்ன நினைக்கிறார்? என்பதை அறிவதில் ஆர்வம் காண்பித்தார்கள்.

தமிழ் நாவலுக்கு நூற்றாண்டு வந்து விட்டது என்பதை கைலாசபதி, யாழ் பல்கலைக்கழகத்தில் ஆய்வரங்கு மூலம் தெரிவித்த பின்புதான் நாமும் அது பற்றிச் சிந்தித்தோம் என்றார் தமிழக இலக்கிய விமர்சகர் சிட்டி சுந்தரராஜன்.

1976 இல் நடந்த குறிப்பிட்ட நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கில் நானும் கலந்துகொண்டேன். தமிழ்நாட்டிலிருந்து பேராசிரியர் தோதாத்திரியையும் படைப்பாளி அசோகமித்திரனையும் கைலாஸ் அழைத்திருந்தார். எனினும் அசோகமித்திரன் மாத்திரமே வந்தார். தோதாத் திரியின் கட்டுரை ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டது.

பெரும்பாலான பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள்தான் அந்த இரண்டு நாள் ஆய்வரங்கில் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். தமிழக இலங்கை நாவலாசிரியர்கள் பலரது நாவல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. இலங்கையின் பிரபல நாவலாசிரியர்கள் டானியல் - இளங்கீரன் - செங்கை ஆழியான் - சொக்கன் முதலானோர் பார்வையாளர்களாகவே சபையில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு பேசும் சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை.

அதனை அவதானித்துக் கொண்டிருந்த மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா ஆய்வரங்கு நிறைவுபெற்ற தரு ணத்தில் வெகுண்டு எழுந்து தனக்கே உரித்தான தர்மாவேசத்துடன் நாவலாசிரியர்கள் இந்த ஆய்வரங்கில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று குரல் எழுப்பினார்.

எனினும், கைலாஸ் அதற்கு எந்தக்கருத்தும் கூறவில்லை. அமைதியாக இருந்தார்.

குறிப்பிட்ட நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கு நாவல் குறித்தும் பயிலும் பல்கலைக் கழக மாணவர்களின் ஆய்வேடுகளுக்கு உசாத்துணையாகத்தான் நடத்தப்பட்டிருக்கிறன என்ற கருத்தும் வெளியானது. எனினும் கைலாஸ் பயனுள்ள பணியையே இன்றும் பேசப்படும் ஆக்க பூர்வமான செயலையே அன்று மேற்கொண்டார். இயங்கிக்கொண்டிருப்பது தான் அவரது இயல்பு.

ஆய்வரங்கின் மதிய உணவு இடைவேளையில் யாழ். பல்கலைக் கழகத்தில் தமது பிரத்தியேக அறையில் அசோகமித்திரனை நான் பேட்டி கண்டு எழுதுவதற்கும் கைலாஸ் பக்கத்துணையாக நின்றார். அசோகமித்திரனிடம் எத்தகைய கேள்விகளை கேட்டால் சிறப்பாகவிருக்கும் என்று எனக்கு ஆலோசனைகளும் சொன்னார்.

குறிப்பிட்ட பேட்டிக்கட்டுரை மல் லிகையில் வெளியானது.




தானும் இயங்கி தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் இயங்கச் செய்வதில் அவர் வல்லவர்.

தினகரனில் அவர் பிரதம ஆசிரியராக பணியாற்றிய காலத்திலும் தேர்ந்த இலக் கிய ரசனையை அந்த ஏரிக் கரைப் பத்திரிகையின் ஊடாக வளர்த்தவர். தனது நண்பர்களான சில்லையூர் செல்வராசன் - காவலூர் ராஜ துரை - இளங்கீரன் உட் பட பலரை ஏதாவது ஒரு இலக்கியத்தலைப்பில் எழுத வைத்தார். பலரும் தமக்குப் பிடித்தமான படைப்பாளிகள் பற்றிய தொட ரில் எழுதினார்கள்.

அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் முற்றவெளியில் தினகரன் விழா வெகு சிறப்பாக நடந்தமைக்கும் பிரதம ஆசிரியராகவிருந்த கைலாசபதியே காரணம் எனச்சொல்வார்கள். சிவாஜி கணேசன் முதல் தடவையாக இந்த தினகரன் விழாவுக்கு வருகைதந்து கலைக்குரிசில் பட்டமும் பெற்றுக் கொண்டு திரும்பினார்.




தினகரனில் கேலிச்சித்திரங்களை வரையுமாறு சிரித்திரன் சிவஞான சுந்தரனுக்கு களம் கொடுத்து ஊக்கமளித்தார். கைலாஸின் இந்த சிறப்பியல்புகளை சிரித்திரன் சிவஞானசுந்தரம் தனது சுயசரிதையில் விரிவாகப் பதிவுசெய் துள்ளார்.

ஏரிக்கரைப் பத்திரிகைகளை ஏகபோக முதலாளித்துவ சக்திகள் நடத்தியதாகவும் அதில் எப்படி ஒரு ரேசலிஸவாதி பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்? என்றும் கைலாஸ் பற்றிய விமர்சனங்கள் (பூரணி இதழில்) வெளியானது.

கைலாஸ் அதற்கும் பதில் சொல்லவில்லை. அவரது மௌனமும் ஒரு பாதைதான்.

தினகரன் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகியதும் பல்கலைக்கழக விரிவுரையாளரான கைலாஸ் இலக்கியத்துறை ஆய்வுகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஒரு பாலமாகவே விளங்கிய வர். இலக்கியத்தில் திறனாய்வு முறையை அவர் ஊக்கப்படுத்தினார்.

தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் நெறிப்படுத்தப்பட்ட இலக்கிய விமர்சனத்துறையை வளம்படுத்தி வளர்த்த பேராசிரியராகவே கைலாசபதி தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் பேசப்படுகிறார்.

அவரது பல இலக்கிய விமர்சன நூல்கள் தமிழ் நாட்டில் இன்றும் மறுபதிப்பு செய்யப்படுவதற்கும் அதுவே அடிப்படை.

அவர் ஒரு சிறந்த நிருவாகி. தான் சார்ந்திருக்கும் பணிகளை நிருவாகத் திறமையுடன் முன்னகர்த்துவார். இதுபற்றி ஒருநாள் அவரிடம் கேட்டேன்.

முதலில் ஒரு மனிதன் தன்னைத்தான் நிருவகித்துக்கொள்ள பழகிக் கொள்ளவேண்டும். உமக்கு ஒரு சிறு உதாரணம் சொல்கின்றேன். எனக்கு தொழில் நிமித்தம் ஏதும் பயணம் இருந்தால் அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே தயாராகிவிடுவேன். தேவைப்படும் ஆவணங்களை தயார்படுத்திக் கொண்டுபயணத்தை எதிர்நோக்குவேன். அவ்வாறு செய்து பழகினால் சென்ற இடத்தில் அதனை விட்டு விட் டேன், அதனை மறந்துவிட்டேன் என்று எம்மை நாமே நொந்து கொள்ளவேண்டிய அவசியம் இருக்காது அல்லவா?

ஓர் இதழுக்கு இந்தத் திகதியில் கட்டுரை தருவதாக ஒப்புக்கொண்டால் அதே திகதியில் அந்த இதழுக்கு சேர்ப்பித்துவிடுவேன். அதற்காக இரவு நீண்ட நேரம் விழித்திருந் தும் எழுதுவேன். எதனையும் நாளைக்குச. செய்யலாம் என்று ஒத்திப் போடுதல் தான் மிகப் பெரிய தவறு என்றார்.

கைலாஸ் எனக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் என்பதற்காகவே இந்தத்தகவலை இங்கு பதிவுசெய்கின்றேன்.

மல்லிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த காலப்பகுதியில் கைலாசபதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் குடும்பத்தினருடன் பல்கலைக்கழக நிருவாகம் வழங்கிய வீட்டில் வசித்தார். மல்லி கைக்குரிய அவரது கட்டுரையை அவரே நேரில் வந்து ஆசிரியர் டொமினிக் ஜீவாவிடம் கொடுப் பார். ஜீவா இல்லையென்றால் அங்கு அச்சுக் கோர்த்துக் கொண்டிருக்கும் சந்திரசேகரம் அண்ணரிடம் கொடுத்து விட்டுப்போவார்.

நீர்வேலியிலிருந்து சந்திரசேகரம் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் ஸ்ரீலங்கா அச்சகத்திற்கும் ராஜா தியேட்டருக்கும் இடையில் இருந்த ஒழுங்கையில் மல்லிகை காரியாலயத்திற்கு சைக்கிளில் வரும் பொழுது பலாலி வீதியில் எதிர்ப் படும் கைலாஸ் தமது காரை நிறுத்திவிட்டு சந்திரசேகரத்து டன் சுகநலன் கேட்டு உரையாடு வாராம். தனது கட்டுரைகளுக்கு களம்தரும் மல்லிகை ஆசிரியர் ஜீவா மாத்திரமல்லர், அவரது கொம்போசிட்டரும் கைலாஸின் நண்பராகத் தான் விளங்கினார்.

கைலாசபதியின் திடீர் மறைவு என்னையும் உலுக்கியதற்கு முக்கிய காரணம் இருந் தது. 1982 டிசம்பர் மாதம் ஒரு வெள்ளிக்கிழமை மாலை நானும் நண்பர் சபா.ஜெயராசாவும் கைலாஸ் அனுமதிக்கப் பட்டிருந்த கொழும்பு பெரியாஸ் பத்திரியில் அவரைப் பார்த்து விட்டு வந்தோம். மறுநாள் சனிக்கிழமையன்று ஞாயிறு வீரகே சரி வாரவெளியீட்டிற்காக ஒரு செய்தி எழுதிக் கொடுத்தேன்.

செய்தியின் சாராம்சம் இதுதான். பேராசிரியர் கைலாசபதி குணமடைகிறார்.

செய்தியும் பத்திரிகையில் பிரசுரமாகி இலங்கையின் அனைத்து பாகங்களுக்கும் போய்விட்டது. யாழ்ப் பாணத்தில் கைலாசின் நண்பர்கள், மாணவர்கள், சேர் உங்களைப் பார்க்க கொழும்பு வருகிறோம் என்று அந்தச் செய்தியைப் படித்துவிட்டு கடிதங்களும் Get Well மடல்களும் அனுப்பிவிட்டனர்.

கைலாஸ் அந்தப் பத்திரிகைச் செய்தியை ஞாயிறன்று படித்தார். ஆனால், அந்தக் கடிதங்கள் மடல்களைப் பார்க்காமலேயே கண்களை மூடிக் கொண்டார். அவரது பூதவுடல் வீட்டில் வைக்கப்பட்டிருந்த பொழுது அவற்றை தபால்சேவகர் கொடுத்து விட்டுச் சென்றார்.

இலங்கை வானொலியில் நண்பர்கள் நுஃமானும், செ.கணேசலிங்கனும் இரங்கலுரை நிகழ்த்தினார்கள். நுஃமான் கைலாஸின் மாணவர். தனது இழப்பின் துயரத்தை அடக்கியவாறு பேசினார். ஆனால் - கணேசலிங்கன் வானொலி ஊடகம் என்றும் பாராமல் தனது துயரத்தை அடக்கமுடியாமல் கதறி அழுதவாறே கைலாஸ் பற்றிய நினைவுகளை பகிர்ந்துகொண்டார்.

நண்பர்கள் குமுறிக் குமுறி அழுதனர். கனத்தை மயானத்தில் நெஞ்சை உருக்கிய அந்தக் காட்சி இன்றும் நெஞ்சமதில் பசுமையாக உள்ளது.

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலைக்கதிர் Kalaikkathir

# கண்டியில் சனியன்று நிலநடுக்கம்

கண்டி, டிசெ. 05

கண்டியில் இன்றும்(சனியன்றும்) சிறிய அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இன்று காலை 7.30 மணியளவில் இந்த நிலநடுக்கம் இடம்பெற்றுள்ளது எனப் புவிச் சரிதவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி கண்டி மாவட்டத்தின் திகன, அம்பாக்கோட்டை, கெங்கல்ல உள்ளிட்ட பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் 4ஆவது தடவையாகப் பதிவாகிய நிலநடுக்கம் இதுவாகும்.

ஏற்கனவே ஒகஸ்ட் 29ஆம் திகதி இரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இன்று வரை 4 தடவைகள் நிலநடுக்கம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவின் பதில் செயலராக மல் செனரத்



ஐக்கிய தேசியக் கட்சியின் பதில்பொதுச்செயலாளராகஷமல் செனரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் இராஜினாமா செய்ததையடுத்தே, பதில் பொதுச் செயலாள ராக ஷமல் செனரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 31ஆம் திகதி வரையே அவர் பதில் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஷமல் செனரத் செயற்பட்டு வந்துள்ளார்.

அண்மையில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஷமல் செனரத் ஆகியோருக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையிலேயே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஷமல் செனரத் வடமேல் மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களின் ஏகோபித்த கட்சியான

# கூட்டமைப்பை எவரும் தடை செய்ய முடியாது

## சம்பந்தன் காட்டம்



தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அது கொண்ட கொள் கையில் - வரித்துக்கொண்ட இலட்சியத்தில் தடம்புரளாது பயணிக்கும். அதை எவரும் பிளவுபடுத்தவும் முடியாது தடை செய்யவும் முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

'தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அந்த இயக்கத்தின் அரசியல் கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கட்சியைத் தடை செய்தே தீருவோம்' என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போது எச்சரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியாகச் செயற்பட்டதில்லை. கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஆதரித்தார்கள் என்பதற்காக அதை விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சி என்று எவரும் அழைக்க முடியாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அப்போது ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச குழு பல தடவைகள் பேச்சுக்களை நடத்தியதை சரத் வீரசேகர உள்ளிட்ட ஆளுந்தரப்பினர் நினைவில்கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி என்றபடியாலேயே அன்று எம்முடன் மஹிந்த அரசு பேச்சு நடத்தியது. இன்றும் நாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் உண்மையான - நேர்மையான - நீதியான பேச்சுக்குத் தயாராகவே இருக்கின்றோம்.

இந்தநிலையில், நாடாளுமன்றத்திலுள்ள ஆளுந்தரப்பினர் கருத்துக்களை வெளியிடும்போது மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும். வாய்க்கு வந்த மாதிரி இனவாத ரீதியில் கருத்துக் களை வெளியிடுவதை அவர்கள் தவிர்க்க வேண்டும். - என்றார்.

# வெள்ளத்தில் மூழ்கியுள்ளது பல்கலை பெண்கள் விடுதி!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கனமழை காரணமாக யாழ். பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அத்தோடு பல்கலைக்கழகத்தின் இராமநாதன் விடுதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அந்த வீதியால் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கொரோனா அச்சம் காரணமாக பல்கலைக் கழகத்தின் கற்றல்செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர.

இதனால் விடுதி பூட்டப்பட்டிருக்கும் நிலையில் விடுதியில் இருந்த மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. அத்தோடு விடுதிக்குள் மின்சார இணைப்பு அறுந்து தொங்கிக் கொண்டிருக்கின்றது.

இதனால் குறித்த வீதியால் பயணம் செய்பவர்கள் பெரும் அச்சத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

# மிக மோசமான சர்வாதிகார சிந்தனையில் செயற்படுகிறார் அமைச்சர் சரத் வீரசேகர!

## அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதற்கு தகுதியற்றவர் என்கிறார் சேனாதிராஜா



தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்ற பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து மிக மோசமான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற அவர் இவ்வாறு இறுமாப்புடன் பேசுவது அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மீண்டும் விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம் பெற்றால் அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது பற்றி அவர் மேலும் கூறியதாவது: -

சரத் வீரசேகரவின் கருத்து மிகமோசமான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும். அவர் உலக வரலாற்றை அறியாமல் பேசுகின்றார். உலக நாடுகள் பலவற்றிலும் விடுதலைக்காகவும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவும் இத்தகைய போராட்டங்கள் நடத்தப்பட்டிருப்பதுடன் அவற்றில் பல போராட்டங்கள் வெற்றியும் கண்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழினத்தின் உரிமைகளைப் பறித்து இராணுவத்தின் ஊடாக அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசால் தமிழர்களின் அமைதிவழிப் போராட்டங்கள் அடக்கப்பட்டமையினாலேயே விடுதலைப்புலிகள் ஆயுதமேந்திப் போராடுகின்ற ஒரு மாபெரும் சக்தியாக இந்த நாட்டில் வளர்ந்தார்கள்.

எனவே, தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும் கொள்கையையும் சரத் வீரசேகரவினாலும் வேறு எந்தவொரு அரசுகளினாலும் அழித்துவிடமுடியாது. தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ள சரத் வீரசேகர, விடுதலைப்புலிகளை அழித்ததைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்று இறுமாப்புடன் பேசுவது அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகின்றது - என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிக்குள்ளும் புகுந்தது வெள்ளம்!





(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ். நகரில் சரியான வடிகால் அமைப்பு வசதியின்மையால் போதனா வைத்தியசாலையின் சில விடுதிக் கட்டடங்கள் அடைமழையால் வெள்ளத்தில் மூழ்கின.

சில வைத்திய சேவைகள் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு சிரமத்தின் மத்தியில் அந்தச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் எடுத்து இவ்வாறான அனர்த்தம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




சரியான நேர்மையான வாழ்க்கை பயணப் பாதை முட்கள் நிறைந்த கரடு முரடான பாதைத்தான்.

இந்தப் பாதையில் முட்களாகவும், கரடுமுரடான கற்களாகவும், பிறரின் அவமானப் பேச்சுக்களும், பழிச்சொற்களும், நியாயமில்லாத விமர்சனங்களும்தான் நிறைந்திருக்கும்.

நீங்கள் இப்படிப்பட்ட பாதையில் பயணிக்கிறீர்கள் என்றால் உங்கள் நற்சிந்தனைகளாலும், நற்செயல்களாலும் மலரும் புதிய பயனுள்ள மலர்களால் பாதையை நிரப்புங்கள். வாழ்க்கைப் பயணம் இனிதாய் அமையும்.

கப்பல் வடிவமைக்கப்படுவது கரையில் நிறுத்தி வைக்கப்படுவதற்கு அல்ல! வாழ்க்கையும் கரையில் நின்று வேடிக்கைப் பார்ப்பதற்கு அல்ல.

# இப்போதைய இளைஞர்கள் எவ்வளவு பாதிக்கப்படுகின்றனர் தெரியுமா ?



நாம் இளைஞர்களாக இருந்த கால கட்டத்தை விட, இப்போதைய இளைஞர்கள் பத்து மடங்கு அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

இதன் காரணம், அதிக வெளியுலக அறிவு, மொபைல்/போன்கள், இன்டர்நெட் மற்றும் ஒரு ‘கிளிக்’கில் கைக்கு எட்டிவிடும் பற்பல வியங்கள்.

இந்தச் சூழ்நிலையின் நெருக்கடியையும், மன உளைச்சலையும் கடந்து செல்ல, உங்கள் பிள்ளைக்கு உங்கள் ‘நிபந்தனையற்ற’ ஏற்பும் அன்பும் மிகவும் தேவை.

அவர்களது அதிகாரத் தோரணைக்கும் முரட்டுத்தனமான நடவடிக்கைகளுக்கும் அப்பால், அவர்களை முழுமையாக உணர்ந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். முதலில், அவர்கள் அனுபவிக்கும் பயங்கரமான மன உளைச்சல்களையும் அழுத்தத்தையும், புரிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் துவங்குங்கள்.

உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்ும் சவால்களுக்குமிடையே இது மிகவும் கடினமாக இருக்கலாம்.

ஆனால், ஒருமுறை உங்களால் இதைச் செய்ய முடிந்தால், இது விலை மதிப்பற்றதாகவும் மிகுந்த பலனளிப்பதாகவும் இருக்கும் என்பது உறுதி..

முற்றிலும் தகுதியற்ற நேரத்தில்தான் உங்கள் பிள்ளைக்கு உங்கள் நிபந்தனையற்ற ஏற்பும் அன்பும் மிகவும் தேவை என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்.

**செய்யக் கூடாதவை:-**

நீங்களாகவே எடைபோட்டு, அனுமானித்து முன் கூட்டிய கருத்துக்கள் ஒன்றையும் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள்.

உங்கள் பிள்ளையை மற்றவர்களுடனோ அல்லது உங்கள் இளமைப் பருவத்துடனோ ஒப்பிட்டுப் பேசாதீர்கள்.

அவர்களை தண்டிக்கவோ, கீழ்ப்படுத்தவோ செய்யாதீர்கள். இதனால் மேலும் தீங்கு ஏற்படவோ, நீங்கள் அவர்களை நிரந்தரமாக இழக்கவோ நேரிடலாம்.

சொல்வது, கட்டளையிடுவது, அறிவுரை கூறுவது, ஒழுக்கம் உரைப்பது, விரிவுரையாற்றுவது இவற்றை நிறுத்துங்கள். இது பலனளிக்காது என்பது நிச்சயம்.

குற்றம் காணாதீர்கள், இது,உங்களுக்கும் உங்கள் பருவவயது பிள்ளைக்குமிடையே ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்தும். (பின்னர் எப்போதேனும், நீங்களிருவரும் நல்ல மனநிலையில் இருக்கும்போது, ஒழுக்கத்தைப் பற்றியும் வரைமுறை ஏற்படுத்துவது பற்றியும் உரையாடலாம்)

**செய்யவேண்டியவை:-**

அவர்களை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள், இன்னும் அதிகமாக நேசியுங்கள், தட்டிக்கொடுத்து அணைத்துக் கொள்ளுங்கள். இன்முகத்தைக் காட்டுங்கள்!

திறந்த மனதுடன் கேட்டுக்கொள்ளவும் சர்ச்சை செய்யவும் இடம் கொடுங்கள். தேவைப்படும்போது அருகிலிருங்கள். மனம் குழப்பமடையாமல் இருக்கும்போது தான் கவனமாகக் கேட்டுக்கொள்ள முடியும்.

அவர்களது சிறு சிறு முயற்சிகளையும் உணர்ந்து கொண்டு அடிக்கடிப் பாராட்டுங்கள்.

எவ்வளவு கடினமாக இருந்தாலும் உங்கள் பிள்ளையை நம்புங்கள், நம்புங்கள், முழுமையாக நம்புங்கள்! (இதை எவ்வளவு வலியுறுத்தினாலும் மிகையாகாது)

உங்கள் பேச்சும், முகபாவமும், செயல்களும் எல்லாமே உங்கள் நம்பிக்கையை அவர்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும்.

ஒருமுறை உங்கள் பிள்ளை உங்கள் நிபந்தனையற்ற அன்பையும் நம்பிக்கையையும் புரிந்து கொண்டு நீங்கள் அவன் பக்கம் இருக்கிறீர்கள் என்று உணர்ந்து விட்டால் போதும். பின்னர் அவன் பெரு முயற்சி எடுத்து உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றுவான்.

ஒன்று ஞாபகமிருக்கட்டும். குழந்தைகள் அனைவருமே உள்ளுக்குள் மிகவும் நல்லவர்கள்தான். இதில் நீங்கள் எந்த அளவு நம்பிக்கை வைத்து, அதை அவர்கள் உணர செய்கிறீர்களோ, அந்த அளவு அவர்கள், தங்களுக்குள் இருக்கும் நன்மையின்பால் ஈர்க்கப் படுகிறார்கள்.

# பிறரை குற்றவாளிகள் என தீர்ப்பிடாதீர்கள்!

வாழ்க்கை வட்டமா? செவ்வகமா? – என்று தெரியவில்லை. ஆனால் அது கஷ்டம் என்று மட்டும் தெரிகிறது. பிறரை குற்றவாளிகள் என தீர்ப்பிடாதீர்கள். பிறர் மீது குற்றம் கண்டுபிடிக்கவோ, பிறரை தீர்ப்பிடவோ பெரிய ஞானம் தேவையில்லை. நம் ஒவ்வொருவருக்கும் உள்ள அடிப்படை அறிவே போதுமானது என இயேசுவே கூறுகிறார்.

பணம், பட்டம், ஆடம்பரம், தற்பெருமை என வாழ்ந்து வரும் இன்றைய சூழலில் ஆன்மிக வாழ்வு சிறப்பானது, அற்புதமானது. அந்த வாழ்வு ஒருவரை ஒருவர் சகோதர, சகோதரியாக வாழ வைக்கிறது.

பல பறவைகள் இரவில் ஒரே மரத்தில் தங்கினாலும் காலையில் ஒவ்வொன்றும் வெவ்வேறு திசை நோக்கி பறந்து செல்கிறது. மனிதர்களும் அதுபோல தான். காலையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசை நோக்கி அவரவர் பணிக்காக செல்கிறோம். பிறரை குற்றவாளிகள் என தீர்ப்பிடாதீர்கள் என்னும் நற்செய்தி வாசகத்தை ஒவ்வொருவரும், அவரவர் உள்ளத்தில் நிலை நிறுத்தி கொள்ள வேண்டும்.

ஒரு பெரிய யானை சிறிய அங்குசத்தை கண்டு



பயப்படுகிறது. ஒரு சிறிய மெழுகுவர்த்தி பெரிய இருளை அகற்றுகிறது. பெரிய மலை, சிறிய உளியால் உடைக்கப்படுகிறது. அதுபோன்று உங்களது உள்ளத்தில் நிலைநிறுத்திக்கொள்ளும் இந்த சிறிய வாசகம் பல ஆயிரம் மக்களை மன்னிக்கும். அதனால் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் வளரும்.

யானையிடமிருந்து ஆயிரம் அடி தூரமும், குதிரையிடமிருந்து நூறு அடி தூரமும், கொம்பு உள்ள மிருகத்திடமிருந்து பத்து அடி தூரமும் விலகியிருங்கள். உங்களிடமிருந்து மற்றவர்கள் விலகியிருக்க வேண்டுமா? அல்லது பயமில்லாமல் அருகில் வர வேண்டுமா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

# நூற்றாண்டுப் பழமை வாய்ந்த சூசையப்பர் முதியோர் இல்லத்தை ஆயர் தன் பணியில் முன்னுரிமைப்படுத்தியமை பாராட்டுதற்குரியது

## மெச்சுகிறார் யாழ் மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் எஸ்.நேசநாயகம் அடிகள்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்ல நிர்வாகக் கட்டடம் 28 நவம்பர் 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

அந்நிகழ்வு பற்றி காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்குக் கருத்துத் தெரிவித்த யாழ் மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் எஸ்.நேசநாயகம் அடிகள் யாழ் மறைமாவட்டத்தின் நூற்றாண்டுப் பழமை மிக்க கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தன் பணிகளில் முன்னுரிமைப்படுத்தியமை பாராட்டுதற்குரியதாகும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது –

ஆயர் அவர்கள் ஆயராக வருவதற்கு முன்னர் – அதாவது எம் மறைமாவட்டத்தின் குருமுதல்வராகப் பணியாற்றிய காலத்திலேயே – இம்முதியோர் இல்லம் இங்குள்ள முதியோருக்குத் தேவையான வசதிகளோடு அமைக்க வேண்டும் என்ற ஆசையோடு இருந்தார். ஆயர் யாழ் மறைமாவட்டத்தைப் பெறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே கொழும்புத்துறை புனித



சூசையப்பர் முதியோர் இல்லத்தை முன்னுரிமைப்படுத்தி அதன் நிர்வாகக் கட்டடத்தை விரைவாகக் கட்டி முடிக்கத் துணை புரிந்துள்ளார். அது மட்டுமல்லாது திறப்பு விழா தினமான 28 நவம்பர் 2020 அன்றே முதியோர் தங்குவதற்கான கட்டடத்திற்குரிய அடிக்கல்லையும் நாட்டி அதற்கான பணிகளை வேகமாக முன்னெடுக்குமாறு பணித்துள்ளார்.

கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்ல நிர்வாக கட்டடத் தொகுதியானது ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் நிதி அனுசரணையோடும் பணியகத்தின் இயக்குநர் தார்சீசியஸ் நிருபன் அடிகளாரின் கடும் முயற்சியாலும் ஜேர்மன் வாழ் தமிழ் மக்



கள் சிலரின் அனுசரணையோடும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் பங்களிப்புடனும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கட்டப்படவுள்ள முதியோர் தங்குவதற்கான கட்டடத்திற்குரிய நிதி அனுசரணையையும் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் தார்சீசியஸ் நிருபன் அடிகளாரே செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வேளையில் அவருக்கு அன்பான நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

அத்தோடு ஆரம்பம் முதல் இன்றுவரை கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தை ஆயர் மற்றும் குரு முதல்வர் ஆகியோரின் வழிநடத்துதலின் கீழ் நிர்வகித்து வரும் திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் பாரட்டப்பட வேண்டியவர்கள். போராட்ட காலத்திலும் இடப்பெயர்விலும் இவர்கள் மனம் தளராது முதியோர் இல்லத்தை பராமரித்து வந்துள்ளார்கள். சிறப்பாக தற்போதைய பொறுப்பாளர் அருட்சகோதரி ம.மரியா அவர்கள் பல கடின கட்டட இடர்பாடுகள் மத்தியில் பணியாற்றி வருகிறார். அவருக்கும் பாராட்டுகள். – என்றார் யாழ் மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் எஸ்.நேசநாயகம் அடிகள்.

12 ஜுலை 2017 இல் யாழ் மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் மற்றும் முதியோர் இல்ல அப்போதைய பொறுப்பாளர் திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரி ம.மறினா ஆகியோரால் கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்ல நிர்வாக கட்டட அடிக்கல் இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# திருச்சிலுவைக் கன்னியர் பணிக்கு நன்றி தெரிவிக்கின்றார் யாழ் ஆயர்






திருச்சிலுவைக் கன்னியர், கொழும்புத்துறை முதியோர் இல்லத்தில் ஆற்றிய பணிகளுக்காக யாழ் மறைமாவட்டத்தின் பெயரால் நன்றிகளைத் தெரிவித்திருக்கிறார் யாழ் ஆயர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்ல நிர்வாகக் கட்டடத்தை 28 நவம்பர் 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திறந்து வைத்த பின்னர், காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழு'க்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது:–

நூற்றாண்டுப் பழமை மிக்க சூசையப்பர் முதியோர் இல்லத்தை புதிதாகக் கட்டியமைக்க விரும்பியபோது ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் தார்சீசியஸ் நிருபன் அடிகளாரின் உதவி கிடைத்தது வாய்ப்பாகி விட்டது. திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் பங்களிப்பும் கிடைத்தது.– என்றார்.

அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:–

திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் (மென்சிங்கன்) இலங்கைக்கு வந்து ஊர்காவற்துறை வைத்திய சாலையில் பணியாற்றத் தொடங்கிய பின்னர் அப்போதைய யாழ் ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் ஆண்டகை கொழும்புத்துறையில் முதியோர் இல்லம் ஒன்றை ஆரம்பித்துப் பணியாற்றும்படி அழைப்பு விடுத்ததார். அதன்படி 1935ஆம் ஆண்டு கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லம் திறக்கப்பட்டது.

அன்று முதல் இன்று வரை திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகளே இந்த முதியோர் இல்லத்தைச் சிறப்பாகப் பராமரித்து வருகின்றனர் என்பது



சிறப்பு முக்கியத்துவத்துடன் இங்கு பதியப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பாக 1996ஆம் ஆண்டு வடபகுதியின் பாரிய இடப்பெயர்வின் போது முதியோருடன் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து இறுதியாக திருகோணமலையில் தஞ்சமடைந்து 1997ஆம் ஆண்டு திரும்பவும் கொழும்புத் துறையை வந்தடைந்த அனுபவம் மறக்கப்பட முடியாதது.

வயதில் முதிர்ந்து, அனுபவத்தில் நிறைந்து, தள்ளாடும் உடலுடனும் தளர்ந்த மனதுடனும் இனி இறப்புத் தான் எமது முடிவு, இறப்பதற்காகவே முதியோர் இல்லம் வந்துள்ளோம் என்ற மரணப் பயத்துடன் மனம் நொந்து போய் இருக்கும் முதியவர்களை அவர்களின் தனிப்பட்ட பின்னணிகள் – பழக்க வழக்கங்கள் – குண நலன்கள் – நடத்தைக் கோலங்கள் – நோய்கள் – மாறாட்டக் குணங்கள் என்பவற்றின் மத்தியில் பராமரிப் பது எளிதானதல்ல. அது சவால் மிக்கதும் சகிப்புத் தன்மையை வேண்டி நிற்பதுமாகும்.

முதுமை வாழ்க்கையின் இரண்டாம் குழந்தைப் பருவம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் ஒவ்வொரு முதியவருக்கும் அவரவரது குழந்தைத் தன்மைக்கு ஏற்ற விதமாகக் கதைக்கவும் – பகிடிவிடவும் – நடிக்கவும் விளையாடவும் வேண்டும். அவர்களை நன்கு புரிந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்றவிதமாக மாறி மாறிப் பணியாற்றவேண்டும். ஆண்கள் பெண்கள் என்ற இருபாலானோரையும் கழுவித் துடைத்து துப்பரவாக்குவது இலகுவான பணியல்ல. அவர்கள் கோபப்பட்டாலோ கத்தினாலோ அல்லது என்ன செய்தாலோ அனைத்தையும் ஏற்றுக் கொண்டும். பொறுத்துக் கொண்டும் கோபப்படாமல் அன்போடு அவர்களோடு நடந்து அவர்களின் இறுதிக் காலத்தை நிம்மதியாகவும் மகிழ்வாகவும் கழிக்க உதவ வேண்டும்.

1935ஆம் ஆண்டு முதல் கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில் பல திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆற்றியுள்ளார்கள். பல நூற்றுக்கணக்கான முதியோரை மத பேதமின்றி அன்பாகப் பராமரித்து இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதியாக இளைப்பாற அனுப்பி வைத்துள்ளார்கள்.

இவ்வேளையில் திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில் ஆற்றிய அளப்பரிய பணிகளுக்காக அன்பான நன்றிகளை யாழ் மறைமாவட்டத்தின் பெயரால் தெரிவிக்கிறோம். இவர்களின் பணி தொடர இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். – என்றார்.

# வெள்ளக் காடாக காட்சியளித்த யாழ் நகர் ...



































காலைக்கதிர் Kalaikkathir




# லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 3164 796

## மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1989.11.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் 5'8" நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 18 செவ்/சூரி - 09 இல்
தகைமை - Bsc தொழில் - Company Work
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் யாழில் வேலை விருப்பம்.

பிறந்த திகதி - 1974.02.29 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம் (4)
கி.பா - 24 செவ் - 12 இல்
தகைமை - BA
தொழில் - நிறுவன முகாமையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி யாழ் வேலை மணமகள் (1978 பின்பு)

பிறந்த திகதி -1981.09.19 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 24 செவ் - 6 இல்
தகைமை - Bsc software engineer தொழில் - Company colombo
எதிர்பார்ப்பு - colombo இல் வேலை செய்யும் மணமகள்.

பிறந்த திகதி - 1988.4.01 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரம் 2
கி.பா - 15 செவ் - 07 இல்
தகைமை - B.B.M. Hons தொழில் - company manager
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1987.06.02 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 20 சூரி/செவ் - 07 இல்
தகைமை -M.B.B.S தொழில் - Doctor (UK PR)
எதிர்பார்ப்பு - Doctor or Engineer UK or இலங்கை மணமகள்.

பிறந்த திகதி - 1989.05.15 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரம் (1)
கி.பா - 44 செவ் - 12 இல்
தகைமை -B.sc Civil Engineer
தொழில் - Civil singpore Engineer
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1986.05.01 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் (4)
கி.பா - 41 செவ் - 12 இல்
தகைமை -AL
தொழில் - Office Assistant அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி - 1987.06.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை (1)
கி.பா - 29 செவ் - 03 இல்
தகைமை - Bsc தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்.

## மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1977.06.28 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - விசாகம் (2)
கி.பா - 38 செவ் - 1 இல்
தகைமை - Bsc தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் கொம்பனி மணமகன்.

பிறந்த திகதி - 1985.10.21 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - திருகோணம் (1)
கி.பா - 14 செவ் - 05 இல்
தகைமை - BA
தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 1983.10.15 மதம் - இந்து
ஜாதி - ... நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 27 செவ் - 9 இல்
தகைமை - Bsc Nurse
தொழில் - அரச சேவை Nurse
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1987.05.22 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 18 செவ் - 10 இல்
தகைமை - Bsc + Msc தொழில் - Development officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை யாழில் வேலை மணமகன்

பிறந்த திகதி - 1991.03.05 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 33 செவ் - 07 இல்
தகைமை - Business management
தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி or Engineer மணமகன்.

பிறந்த திகதி - 1990.12.08 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் - 08 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1993.04.20 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 40 செவ் - 8 இல்
தகைமை - Cima தொழில் - Bank Accountant
எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி கொழும்பில் வேலை மணமகன்.

பிறந்த திகதி - 1992.06.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - அனுசம் (4)
கி.பா - 42 செவ் - 12 இல்
தகைமை - Bsc Nurse தொழில் - Nurse
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**

# சொர்க்கம் திருமண சேவை

## மணமகன் விபரம்

பிறந்த திகதி - 1986.01.06 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - விசாகம்
செவ் - 8இல் தொழில் - சொந்தத் தொழில்
எதிர்பார்ப்பு - நற்குடும்ப பின்னணி பெண்.

பிறந்த திகதி - 1983.09.13 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அனுசம்
செவ் - லக்கினத்தில்
தொழில் -முகாமைத்துவ உதவியாளர் (PVT)
எதிர்பார்ப்பு - நற்குடும்ப பின்னணி அழகிய பெண்.

பிறந்த திகதி - 1988.11.10 மதம் - இந்து
ஜாதி - பள்ளர் நட்சத்திரம் - விசாகம்
செவ் - 8 இல் (கனடா)
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1995.05.12 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - சித்திரை 2ம் பாதம்
தகைமை - கனடா செவ் - 7 இல்
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1991.05.03 மதம் -இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - மூலம்
தகைமை - IT and Accounting தொழில் - Accountant
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண்.

பிறந்த திகதி - 1987.10.19 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - பூரம்
தகைமை - MA தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண்.

## மணமகள் விபரம்

பிறந்த திகதி - 1994.01.04 மதம் - இந்து
ஜாதி - நளவர் நட்சத்திரம் - அஸ்தம்
கி.பா - .... செவ்/சூரி - 07 இல்
தகைமை - BA தொழில் - அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - சூரிய செவ்வாயுடைய அரச உத்தியோக மணமகன்.

பிறந்த திகதி - 1983.10.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - .... செவ் - லக்கினத்தில்
தகைமை - BA தொழில் - Development Officer
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்.

பிறந்த திகதி - 1988.05.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - சதயம்
கி.பா - ...... செவ் - 12 இல்
தகைமை - AL தொழில் - அலுவலக உதவியாளர்
எதிர்பார்ப்பு - நன்நடத்தை மணமகன்.

பிறந்த திகதி - 1983.08.06 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - ... செவ்/சூரி - 8 இல்
தகைமை - AL தொழில் - Post Office Clerk
எதிர்பார்ப்பு -நன்நடத்தை மணமகன்.

பிறந்த திகதி - 1991.05.24 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அஸ்தம்
செவ் - 12 இல் தகைமை - B.SC Hons
தொழில் - ... Engineer
எதிர்பார்ப்பு - படித்த பட்டதாரி மணமகன். கொழும்பை அண்மித்த பகுதி

பிறந்த திகதி - 1992.08.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் தகைமை - BA Following
நட்சத்திரம் - சித்திரை 2ஆம் பாதம்
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்

**102/A பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். www.sorkham.com**

**தொடர்புக்கு - 0014166661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515**

# காலமும் கணங் ....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைலாசபதியின் மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பு என்று வழக்கம்போன்று பொதுப்படையாக எழுதாமல்- ஈடு செய்யப்பட வேண்டிய இழப்பு என்றே எழுதினேன்.

கைலாஸின் மரணப்படுகையருகே அவரது அருமை மனைவி திருமதி.சர்வமங்களம் கைலாசபதி அந்த இழப்பைத் தாங்கிக் கொண்டு மன உறுதியுடன் செயற்பட்டவிதம் குறித்து பின்னாளில் நண்பர் பிரேம்ஜி மல்லிகையில் எழுதியதாக ஞாபகம்.

இலங்கை செல்லும் சந்தர்ப்பங்களில் கொழும்பில் கைலாஸின் இல்லத்துக்குச் சென்று திருமதி சர்வமங்களம் கைலாசபதியுடன் பழைய நினைவுகளை மீட்டி உரையாடுவது எனது வழக்கம். அவர் ஒரு தொண்டு நிறுவனத்தில் செயற்படுவது அறிந்து எனது வாழ்த்துக்களைச் சொன்னேன்.

எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1983 மார்ச் மாதம் பாரதிநூற்றாண்டு விழாவை நாடளாவிய ரீதியில் கொண்டாடியபொழுது பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பாரதி நூல் கண்காட்சியும் படைப்பாளிகளின் ஒளிப்படக்கண்காட்சியும் நடத்தினோம். அதற்கு சில மாதங்களுக்கு முன்னரே கைலாசபதி மறைந்தார். கைலாசபதியிடமிருந்த பெறுமதியான பல பாரதி ஆய்வு நூல்களை அந்தக் கண்காட்சியில் வைப்பதற்கு விரும்பினோம். எமது விருப்பத்தை திருமதி சர்வமங்களம் கைலாசபதியிடம் சொன்னவுடன் எந்த மறுப்போ தயக்கமோ இன்றி கணவரின் சேகரிப்பிலிருந்த அனைத்து பாரதி சம்பந்தப்பட்ட நூல்களையும் அவரே எடுத்து வந்து மேசைகளில் பரப்பி கண்காட்சி சிறப்பாக நடப்பதற்கு உதவினார். அவர் கைலாஸுடன் இணைந்து ஒரு நூலும் எழுதியிருப்பவர். கைலாஸின் வெற்றிகளுக்கு பின்புலமாகத்திகழ்ந்தவர்.

திருமதி கைலாசபதியை குறிப்பிடும்பொழுது -
காதலொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து...

- என்ற மகாகவி பாரதியின் கவிதை வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

கைலாஸின் ஆளுமையை நினைவுகூரும் வகையில் கைலாசபதியை மீள வாசிப்போம் என்ற தலைப்பில் இன்று டிசம்பர் 06 ஆம் திகதி முதல் எதிர் வரும் 10 ஆம் திகதி வரையில் ஐந்து நாள்கள் தொடர் கருத்தரங்கு இணைய வழி காணொளி ஊடாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. லண்டனிலிருந்து பேராசிரியர் பாலசுகுமார் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துள்ளார்.

இலங்கை சேனையூர் அனாமிகா களரி பண்பாட்டு மையம், தமிழ்நாடு திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரியின் தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, சென்னை டிஸ்கவரி புக்பெலஸ் ஆகியன இணைந்து குறிப்பிட்ட தொடர் காணொலி அரங்கினை முன்னெடுத்துள்ளன.

# சண்முகம் சபேசன்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபேசனின் வானொலி உரைகள் ஏராளமாக அவரது சேகரிப்பில் இருக்கின்றன.

சில கட்டுரைகள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. மூத்த சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா முதல், முன்னாள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமர் வரையில் சபேசனின் சில உரைகள் தமிழிலும் ஆங்கில மொழி பெயர்ப்பூடாகவும் சென்றிருக்கும் செய்திகள் பலரும் அறியாதது.

குறிப்பிட்ட உரைகளை தொகுத்து நூலாக வெளியிடவேண்டும் என்ற கனவையும் நீண்ட நாற் களாக மனதில் சுமந்துகொண்டிருந்தவர்.

2020 ஆம் ஆண்டு பிறந்ததும் அந்த வேலைகளை ஆரம்பிக்கும் எண்ணத்திலிருந்தவர். எதிர்பாராமல் சுகவீனமுற்றார். கடந்த மேமாதம் 29 ஆம் திகதி அதிகாலை காலன் அவரை கவர்ந்து சென்றான்.

அவரது வாழ்வையும் பணிகளையும் நினைவுகூரும் அரங்கம் இன்று 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணையவழி காணொலி ஊடாக ஏற்பாடாகியுள்ளது. இந்நிகழ்வை சபேசனின் நண்பர்கள், எழுத்தாளர்கள் நடேசன், முருகபூபதி ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்காணொலி அரங்கில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன், சுந்தரமூர்த்தி, நவரத்தினம் இளங்கோ, எழுத்தாளர் பாடும்மீன் சிறிந்தராசா, ஜூட் பிரகாஷ், மோகன்குமார் மற்றும் திருமதி சிவமலர் சபேசன் ஆகியோரும் சபேசனின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களும் உரையாற்றுவர்.

இன்று 06 ஆம் திகதி மாலை 7.00 மணி - அவுஸ்திரேலியா மெல்பன் நேரம்.

இந்தியா தமிழ்நாடு - நேரம் பகல் 1.30 மணி
ஐரோப்பா நேரம் - காலை 8.00 மணி
காணொலி இணையவழி ZOOM ID
https://us02wfb.zoom.us/j/84094440988?pw=Q2lCZ2x0QWc2RllKSS96SG5uRXNCQT09

## எத்தனை வருடங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

நான் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்ததாக சிலர் இங்கு கூறுகின்றனர்.

நான் தேர்தலில் போட்டியிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டே இந்த நாடாளுமன்றம் வந்துள்ளேன் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மட்டக்களப்பில் இளைஞர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் 26, 27, 28ஆம் திகதிகளில் முகப்புத்தகத்தில் சில பதிவுகளை இட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 29 வயதான அரச ஊழியர் ஒருவரும் அடங்குகின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தையும், மாவீரர் நாள் பதிவுகளையும் முகப்புத்தகத்தில் பதிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதுவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கைதுசெய்துள்ள அரசு, அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

முகப்புத்தகத்தில் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பிரசுரித்தவர்களைப் பொலிஸார் கைசெய்வது என்பது அரசின் இயலாமையை மூடி மறைக்கும்படியான செயலாகும்.

இவர்களைக் கைது செய்வதற்குப் பதிலாகப் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்களைக் கைதுசெய்து சிறையில் அடையுங்கள்.

அரசின் மீது குற்றச்சாட்டுக்களை வைக்க வேண்டும் என்பதல்ல எனது நோக்கம். நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதேபோன்று அரசு ஏனைய விடயங்களை மறைப்பதற்காக இவ்வாறு அப்பாவி இளைஞர்களைக் கைதுசெய்வதை நிறுத்த வேண்டும்.

கார்த்திகை விளக்கீடு என்பது ஒரு பண்டிகை. இப்படியான பண்டிகை நாளில் பொலிஸார் கார்த்திகை தீபம் ஏற்றத் தடை ஏற்படுத்தியுள்ளனர். இதனை ஒருபோதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒருசில இடங்களில் மக்கள் விளக்குகளை – தீபங்களை ஏற்றுவதற்காகச் சிறிய அலங்காரங்களைச் செய்திருந்தனர். இதனையும் பொலிஸார் எட்டி உதைத்துள்ளனர்.

நீங்கள் உண்மையான பௌத்தர் என்றால் மனிதத்துவத்துக்கு மரியாதை செலுத்த முதலில் பழகிக்கொள்ளுங்கள்.

உண்மையிலேயே இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்கள் பாவம். நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் உரையாற்றியபோது, சரத் வீரசேகர உள்ளிட்டவர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தமை காரணமாகவே இவ்வாறு எதிர்ப்பை வெளியிட முடிந்தது எனக் கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். இவ்வாறு செய்து கொண்டு நீங்களே நாட்டில் பிரச்சினைகளை உருவாக்குகின்றீர்கள்.

நீங்கள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து சஹ்ரானை உருவாக்கியதாகக் கூறுகின்றீர்கள். நீங்கள் நாட்டில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றீர்கள். நீங்களே சஹ்ரானை உருவாக்கினீர்கள்.

நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களைப் புதைப்பதற்குத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அவர்கள் தங்களுக்கு இறுதியாகவுள்ள உரிமையையே கேட்கின்றனர். அதனை வழங்குவதற்குக்கூட இந்த அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

# வெள்ளப் பாதிப்புக்களை நேரில் சென்று ஆராய்ந்தார் யாழ்.மேயர்




புரெவி புயலின் அசாதாரண நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதி, யாழ்.ஸ்ரான்லி வீதியில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களை யாழ். மாநகர மேயர் இம்மானுவல் ஆனல்ட் நேற்று நேரடிக் கள விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தார்.

இதன்போது முனீஸ்வரன் வீதியில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்கள், வடிகால் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பில் அவர் ஆராய்ந்தார்.

அப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் மேயருடன் கலந்துரையாடினர்.

மேயரும் வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய தெளிவுகளை வழங்கினார்.

மேயரின் இந்த விஜயத்தில் யாழ். மாநகர பிரதி மேயர் து.ஈசனும் இணைந்திருந்திருந்தார்.

ஸ்ரான்லி வீதியில் வெள்ளப்பாதிப்புக்கள் அதிகளவில் நீண்ட நேரம் காணப்பட்டமையினை அவதானிக்க முடிந்தது. இதன் காரணத்தினால் ஸ்ரான்லி வீதி பகுதியளவில் குறிப்பிட்ட நேரம் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டது.

குறித்த பகுதி கடை நடாத்துனர்கள் அவ் வீதியில் ஏற்பட்ட அனர்த்தம் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பில் முதல்வருடன் நேரடியாகக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தாழமுக்கம் கரையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டமும் (தீவுப்பகுதிகள் உட்பட) மன்னார் மாவட்டமும் கனமழைக்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றன.

சிலவேளை அதற்கு முன்பாக இந்தத் தாழமுக்கம் கரையைக் கடந்தால் வடக்கில் படிப்படியாக மழை குறையும்.

ஆனாலும், தற்போதைய நிலையின்படி தாழமுக்கம் அதே இடத்தில் தொடரவே வாய்ப்புண்டு. ஏற்கனவே மண், நீர் நிரம்பிய நிலையில் காணப்படுவதால் 50 மி.மீ. மழை கிடைத்தாலே வெள்ள அனர்த்தம் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே, மக்கள் தொடர்ந்து அவதானமாக இருப்பது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடற்படையினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருக்குப் பி.சி.ஆர். மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பரிசோதனைகளிலேயே ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்த காலத்தில் வெலிசறை கடற்படை முகாமில் ஏற்பட்ட பரவலின் போது சுமார் ஆயிரம் கடற்படையினர் அதனால் பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனைவி சுட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 57 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரான கணவன் மாத்தளை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். அவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

## ஒன்றரை வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீடு திரும்பிய நிலையில் கடந்த வியாழக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் அவரது குடும்ப உறுப்பினர்கள் மூவருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதற்கமைவாக மேற்படி குடும்பஸ்தரின் ஒன்றரை வயது குழந்தை, மனைவி (வயது 29) மற்றும் மாமியார் (வயது 65) ஆகிய மூவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நேற்றும் 669...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்களில் 20 ஆயிரத்து 90 பேர் குணமடைந் துள்ளனர். 7 ஆயிரத்து ஒரு பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## பத்திரிகை நிறுவன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பவர்களாவர்.

இதேவேளை, குறித்த பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றும் ஊடகவிலாளர் ஒருவர் கடந்த மாதம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

வேலைக்கு ஆள்கள் தேவை
எஸ்.கே. கட்டட ஒப்பந்தகாரர், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

கருங்கல்லிலாலான விக்கிரகம் செதுக்கக் கூடிய சிற்பாச்சாரியர்கள் இருவர் வேலைக்கு தேவை.

குறிப்பு - ஆலயங்கள், மூலஸ்தானங்கள், இராஜ கோபுர நுழைவாயில், இந்தியப் பரம்பரை சிற்பாச்சாரிகளின் நிபுணத்துவ தொழில்நுட்பக் கலைஞர்கள் மூலமாக பொம்மைகள், பழமை வாய்ந்த வரலாற்று ரீதியான வடிவமைப்புக்களில் அமைத்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு - 077 857 8528

## மரண அறிவித்தல்



### அமரர் நல்லம்மா கந்தசாமி

அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா கந்தசாமி நேற்று (05.12.2020) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் ஆச்சிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஆச்சிமுத்துவின் அன்பு மகளும், அமரர் சின்னத்தம்பி கந்தசாமியின் அன்பு மானைவியும், அமரர் தெய்வேந்திரம், பசுபதி, மலர், நேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரதி (கிளி), பவானி (இத்தாலி), இரா ஜேந்திரன் (இத்தாலி), இரவீந்திரன் (யாழ்.மாநகர சபை), கீதா (யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), மகேந்திரன் (இத்தாலி), சுஜாதா ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, முருகையா, றதி, விமலா (ஆசிரியை – யாழ்.இந்து மகளிர் கல்லூரி), அன்ரன் நிவாகரன் (விவசாயத் திணைக்களம்), புஸ்பராணி குணரட்ணம் (மினிபஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஷி (வைத்தியர், யாழ்.போதனா வைத்தியசாலை), நிவேதிகா, ஜினோட், நிதுசா, ரேணுயன், மதுஷன், மாதங்கி, பிரியங்கா, சுலேதிகா, அக்ஷயன், அலஸ்ரீன், டிலிசியா, அபிஷேக், றிஸ்னி, அனோஜா, காணுயன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் இல.18, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்

T.P:-0776382003

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

Beetel Lanka
Courier Service
Photo Copy/ Calls/ Fax/ Print
Indian Visa Application
021 222 8591 / 077 774 1117
272.K.K.S road. Jaffna
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
DHL FedEx aramex SKYNET

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
EXPRESS Courier Service
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
யாழ்ப்பாணம் கிளிநொச்சி வவுனியா
சங்கானை முல்லைத்தீவு மல்லாவி
கல்வியங்காடு புதுக்குடியிருப்பு மன்னார்
ஆவரங்கால் கனகராயன்குளம் கொழும்பு
நெல்லியடி சங்கத்தானை பளை
லண்டன் 1050/=
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1150/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
Whatsapp No - 076 1221566

BRRENS FASHION PLANET
Signature Reborn
பிறென்ஸ் பஷின் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான
அனைத்து ரெடிமேட் ஆடைகள்
எங்களிடம்
பெண்களுக்கான
அனைத்து ஆடைகளும், பிரத்யேகமாக
திருமணம், பூப்புனித நீராட்டு விழா
மற்றும் சுப நிகழ்வுகளுக்கு
சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த
முறையில், குறித்த தவணையில்
செய்து தரப்படும்.
075 527 9110
077 332 1937
021 2221 2777
சிவன் கோவில் வடக்கு வீதி.
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
Fb. Brrens Fashion Planet
Email . brensfashionplanet@gmail.com

northern PC PARK
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகரமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
10, Muddaskadai Junction
Stanley Road, Jaffna
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line - 077 777 1545

# திருகோணமலை காட்டுப் பகுதியில் 5 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன!



திருகோணமலை – சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீலபொல காட்டுப்பகுதியில், ஐந்து கைக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீலபொல காட்டுப் பகுதியில் கைக்குண்டுகள் காணப்படுவதாக சேருவில இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கமைய கடந்த வெள்ளிக்கிழமை அப் பகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, ஐந்து கைக் குண்டுகளை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கைக் குண்டுகளை, திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடி படையினர் செயலிழக்கச் செய்துள்ளனர்.

இந்தக் கைக்குண்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எஸ்.எப்.87 வர்க்கத்தை சேர்ந்தவை என தெரிவித்த சேருவில பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

HIKVISION Mega Store
No 1 Worldwide CCTV and Video Surveillance
கிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION
Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
இல - 164, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
164, Palaly Road,
Thirunelvely, Jaffna
hikvisionmegastore@gmail.com

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1986.10.20 | பிறந்த திகதி - 1977.10.08 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பரணி | நட்சத்திரம் - ஆயிலியம் |
| பாவம் - 30 1/2 | பாவம் - 46 1/4 |
| கல்வி - Bsc Software | கல்வி - பட்டதாரி |
| தொழில் - Software Engineer | தொழில் - ஆஸ்திரேலியா PR |
| எதிர்பார்ப்பு - கொழும்பில் வேலை செய்யும் Engineer OR Doctor | எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா மணமகன். PR இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை
உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2020 இல் வெளியிடப்பெற்றது.